JANASAKTHI போன்: 84097 4 பக்கம் ஒரு அணா மலர் 8 இதழ் 302 இலங்கை 10 சதம் REGD. NO. M. 5934

ஜனசக்தி

சென்னை	நந்தன, ஐப்பசி 3௳	ஞாயிற்றுக்கிழமை	1952, அக். 19
வெளியூர்	நந்தன, ஐப்பசி 4௳	திங்கட்கிழமை	1952, அக். 20

இந்தோ-சீனாவில் பிரெஞ்சுப் படைகளுக்கு 2,20,000 பேர் நஷ்டம்

நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவிப்பு

லண்டன், அக். 19—

வியத்-நாமில் பிரெஞ்சு ஏகாதிபத்தியப் படைகளுக்கு இதுவரை 2,20,000 பேர் (ஆபீஸர்களும், சோல்ஜர்களும்) நஷ்டமேற்பட்டுள்ளதாக நவசீன செய்தி ஸ்தாபனம் நேற்றிரவு அறிவித்தது.

பிற்போக்கான பிரெஞ்சு சர்க்காரின் யுத்தக் கொள்கையின் காரணமாக பிரெஞ்சு மக்களுக்கு வாழ்க்கையில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அவர்களின் வாழ்க்கைத்தரம் வெகுவாக குறைந்துவிட்டது. கணக்கற்ற பிரெஞ்சுப் புதல்வர்களுக்கு அழிவேற்பட்டது என்று மேலும் அச் செய்தி தெரிவித்தது.

சமாதானம் நிலவ சோவியத் 7 அம்ச திட்டம்

ஐ. நா. வில் விஷின்ஸ்கி சமர்ப்பித்தார்

யுத்தக் கைதிகளைத் திருப்பி அனுப்பவும்

கொரியாவிலிருந்து அன்னியத் துருப்புகளை வாபஸ்பெறவும் யோசனை

கொரியாவைக் கொரியர்களே ஐக்கியப்படுத்த வேண்டும்

ஐ. நா. அக். 18—

கொரியாவில் உடனடியாக யுத்த நிறுத்தம் ஏற்படவும், சர்வதேச நெருக்கடி நிலைமையைத் தணித்து, நீடித்த சமாதானம் நிலைபெறச் செய்யவும் சோவியத் அயல்நாட்டு மந்திரி தோழர் விஷின்ஸ்கி இன்று ஏழு அம்சம் கொண்ட சமாதான திட்டத்தை ஐ. நா. பொதுச்சபையில் சமர்ப்பித்தார்.

கொரியப் பிரச்னையைத் தீர்க்க அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணை சமத்துவம், நீதி நேர்மையின் கோட்பாடுகள் அனைத்தையும் புறக்கணித்துள்ளது என்று கூறி அதை அவர் உதறித் தள்ளினார்.

சமாதான திட்டத்தைப் பொதுசபையில் விஷின்ஸ்கி சமர்ப்பித்த பொழுது பிரிட்டிஷ் ராஜாங்க மந்திரி செல்வின் லாயிடும், அமெரிக்க அயல்நாட்டு மந்திரி அச்சீஸனும் பிரசன்னமாயிருந்தனர். பார்வையாளர்கள் பகுதியில் பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

நேற்றிரவு பொலந்து அயல்நாட்டு மந்திரி தோழர் ஸ்டானிஸ்லா ஸ்க்ரெஸெவிஸ்கி அறிவித்த ஒன்பதம்ச திட்டத்தைப் போன்றே தோழர் விஷின்ஸ்கி இன்று சமர்ப்பித்த சமாதான திட்டமும் அமைந்திருக்கிறது.

திட்ட விபரம்

1. சர்வதேசக் கோட்பாடுகளினடிப்படையில் எல்லா கொரிய யுத்தக் கைதிகளையும் திருப்பி அனுப்புதல்.

2. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் கொரியாவிலிருந்து அன்னியத் துருப்புகளை வாபஸ் வாங்குவது.

3. கொரியப் போரில் ஈடுபட்டிருக்கும் நாட்டு பிரதிநிதிகளும் ஈடுபடாத தேசங்களின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு கமிஷனின் மேற்பார்வையின் கீழ் கொரியாவைக் கொரியர்களே ஐக்கியப்படுத்துதல்.

4 வல்லரசுகளின் ராணுவ பலத்தை மூன்றில் ஒரு பங்கு குறைத்தல்.

5. அணுசக்தி ஆயுதங்களை உடனடியாக நிபந்தனையின்றி தடை செய்தல், தடையை அமல் நடத்த கண்டிப்பான சர்வ தேசக் கட்டுப்பாட்டை நிறுவுதல்.

6. விஷக்கிருமிப் போரைத் தடைசெய்யும் ஜினீவா ஒப்பந்தத்தை எல்லா நாடுகளும் ஊர்ஜிதம் செய்தல்.

7. ஐம்பெரும் வல்லரசுகள் தமக்குள் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளுதல்.

யுத்த வெறியர்களைப் பிய்த்தெறிந்தார்

அமெரிக்க யுத்த வெறியர்களின் மாய்மாலப் பிரசாரத்தை தோழர் விஷின்ஸ்கி பிய்த்தெறிந்தார். கொரியாவில் மரண தாண்டவமாடி, யுத்தக்கைதிகளைப் படுகொலை செய்த ரத்தக்கறை படிந்த அமெரிக்க கொலைஞர்கள்மீது அவர் கொடுங்குற்றம் சாட்டினார். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய தேசங்கள் போர்வெறி மனப்பான்மையை வளர்த்துவருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

வட அட்லாண்டிக் ஆக்கிரமிப்பணி தேசங்களின் போர்த் திட்டங்களையும், சோவியத் சர்க்காரின் சமாதான அபிலாஷைகளையும் அவர் ஒப்பிட்டுக் காட்டினார். கொரியாவில் அமெரிக்க ராணுவம் விஷக்கிருமிகளைப் பிரயோகம் செய்த அரக்கத்தனத்தை அவர் அம்பலப்படுத்தினார்.

சர்வதேச நெருக்கடி மேலும் தீவிரமாகி முற்றி வருவதில் வட அட்லாண்டிக் ஆக்கிரமிப்பணிக்கு தீர்மானமான பங்கிருக்கிறது என்று தோழர் விஷின்ஸ்கி தெளிவாக அறிவித்தார். சமாதான ஜபம் செய்துகொண்டே அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் போர்வெறி மனப்பான்மையை ஊட்டி வளர்ப்பதாகவும், இன்று உலகை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்கவிடாமல் தடைசெய்து வருவதாகவும் தோழர் விஷின்ஸ்கி குற்றம் சாட்டினார்.

ஐந்து வருஷத்திற்கு சிலோன் ரப்பரை சீனா வாங்கத் தயார்!

கொழும்பு, அக். 18—

சிலோனிடமிருந்து 50,000 டன் ரப்பர் அல்லது அடுத்த ஐந்து வருடத்திற்கு சிலோனில் விளையும் பூரா ரப்பரையும் விலைக்குவாங்க நவசீனா தயாராக இருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இத்துடன் வருடாந்திரம் 2 லக்ஷம் டன் சிலோனுக்கு அரிசி கொடுக்க சீனா தயாராக இருப்பதாக கூறியுள்ளதாகவும் தெரிகிறது.

ரப்பருக்காகச் சீனா கொடுக்கத் தயாராக இருக்கும் விலை உலக மார்க்கெட் விலையை விட அதிகமாக இருப்பதாகவும் தெரிகிறது.

சிலோனுடன் செய்து கொள்ள விரும்பும் நீண்டகால வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கிய அம்ஸங்கள் இவை. இந்த ஷரத்துக்களை சிலோன் சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

‘சுதந்திர’ தொழிற்சங்க கலாசாலை

கல்கத்தா, அக். 18—

சர்வ தேசிய ‘சுதந்திர’ தொழிற்சங்க ஸ்தாபனத்தின் கல்கத்தா கிளை, ஆசிய தொழிற்சங்கக் கலாசாலை ஒன்று கல்கத்தாவில் நடத்தப் போகிறதாம். தொழிற்சங்க இயக்கத்தைப் பற்றி பயிற்சி அளிப்பதற்காக ஐரோப்பிய, ஆசிய தொழிற்சங்க இயக்கத் தலைவர்கள் வந்து பேசப் போகிறார்களாம். ஆசிய நாட்டிலுள்ள பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்களை ஒன்று சேர்ப்பது இதன் நோக்கமாம்.

பிரச்னைகளுக்கு பரிகாரம் தேடுவது பற்றி நேருவின் கூற்று!

கல்கத்தா, அக். 19—

தன்னுடைய அஸ்ஸாம் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு கல்கத்தா வந்து சேர்ந்த நேரு, “உலகத்தில் நிறைய பிரச்னைகள் இருக்கின்றன. அவைகள் மிகவும் சிக்கலானவை கூட. அவைகளுக்கு திடீரென்று பரிகாரம் தேட முயற்சித்தால், அப்பிரச்னைகள் மேலும் சிக்கலாய் விடும் என்று இன்று இங்கு கூறினார்.

ஈரானிய மந்திரி சபைக் கூட்டம்

டெஹ்ரான், அக். 18—

பிரிட்டனுடன் ஸ்தானிக உறவுகளைத் துண்டித்துக்கொண்டது சம்பந்தமாக விவாதிக்க ஈரானிய மந்திரி சபை மூஸாதேக் வீட்டில் கூடியது.

ஸ்தானிக உறவுகளை முறித்துக்கொண்டதின் மூலம், ஈரானிலுள்ள பிரிட்டிஷ் ஒற்றர்களின் சதிச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதென்று பக்தார் இம்ரோஜ எனும் பத்திரிகை எழுதியுள்ளது.

மூன்றுமணி நேரம் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் இப்பிரச்னை இன்னும் பரிசீலிக்கப்படவில்லையென்றும், பின்னர் நடைபெறும் கூட்டத்தில் விவாதிக்கப்படுமென்றும் கூட்டமுடிவில் நிருபர்களிடம் மந்திரிகள் அறிவித்தனர்.

பிரிட்டிஷ்-சீன வியாபாரத்தில் முன்னேற்றம்

1 கோடி பவுனுக்கு சாமான் வாங்க சீனா தயார்

லண்டன், அக். 18—

சீனா உடனடியாக பிரிட்டனுடன் 1 கோடி பவுன் பெறுமான சாமான்கள் யந்திரங்கள் ஆர்டர் கொடுக்கத் தயாராயிருக்கிறது என்று லண்டன் ஏற்றுமதி கார்ப்பரேஷன் லிமிடெட் இன்று அறிவித்தது.

இந்த கார்ப்பரேஷன் இவ்வருடம் ஜூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது பல தனிப்பட்ட ஏற்றுமதி ஏஜென்ஸிகளைக் கொண்டது. இது சீன தேசிய ஏற்றுமதி-இறக்குமதி கார்ப்பரேஷன் சார்பில் பணியாற்றும்.

பஞ்சாலை யந்திரங்கள், யந்திர பாகங்கள், கட்டட, சுரங்க, பட்டறைக் கருவிகள், டைப்ரைடர்கள், கணக்குப் பார்க்கும் கருவி போன்ற அலுவலக யந்திரங்களையும், ரசாயன தொழிற்சாலை கருவிகள், பலவித எஞ்சின்கள், கம்பிரசர்கள், குளிர்பதன யந்திரம் ஆஸ்பத்திரி உஷ்ணபடுத்தும் சாதனங்கள் இவைகளுக்கு ஆர்டர்கள் கொடுக்கப்படும் என்று கார்ப்பரேஷன் அறிக்கையில் கூறியுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேசப் பொருளாதார மகாநாடு சீனாவுக்கும் பிரிட்டனுக்கும் புதிய வியாபார கால்வாய்களை திறந்து விட்டுள்ளது. பிரிட்டிஷ் கம்பெனிகளிடம அப்போதே 40 லக்ஷம் பவுன்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது என்று கம்பெனி கூறியுள்ளது.

3-வது உலக சமாதானக் காங்கிரஸ் டிசம்பர் 9-ல்

மாஸ்கோ, அக். 18—

3-வது உலக சமாதானக் காங்கிரஸை ஆஸ்டிரியத் தலைநகர் வியன்னாவில் டிசம்பர் 9ந் தேதியன்று நடத்துவதென உலக சமாதானக் கவுன்சில் முடிவு செய்துள்ளது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு நார்வே உதவி

ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று

ஐக்ய நாடுகள், அக். 17—

ஐ. நா. சபை, இந்தியா, நார்வே ஆகிய மூன்றும், பின் தங்கிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்யும் ஒரு முக்கூட்டு ஒப்பந்தத்தில் இன்று கையெழுத்திட்டன.

ஐ. நா சபையின் பொதுக் காரியதரிசி ட்ரிக்விலி, நார்வே பிரதிநிதி ஹான்ஸ் எங்கென், இந்தியப் பிரதிநிதி ராஜேஸ்வரி தயாள் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு நார்வே சர்க்காரும், நார்வே மக்களும் தொழில் நுணுக்க உதவியும், இயந்திர சாதன உதவியும் அளிப்பார்களாம்.

இந்தோசீனாவில் பிரஞ்சு வெறியருக்கு தோல்விமேல் தோல்வி

துரிதமாக முன்னேறும் வியத்மின் விடுதலைப் படைகள்

ஹனோய், அக். 19—

பிரெஞ்சுத் துருப்புகளைவிட எண்ணிக்கையில் மிக அதிகமுள்ள வியத்-மின் கொரில்லாப்படையினர், இந்தோ-சீனாவிலுள்ள நெல் விளையும் டோங்கிங் சமவெளிப் பிரதேசத்தின் வாயிற்படியாகவுள்ள கியாலோ என்ற இடத்தைப் பிடித்துவிட்டு அடுத்துள்ள என்பே என்ற பிரெஞ்சு தளத்தைப் பிடிப்பதற்கு விரைந்துகொண்டிருக்கின்றனர் என்று பிரெஞ்சு ராணுவ அதிகாரி ஒருவர் இன்று கூறினார்.

கடந்த ஒரு வாரத்தில் பிரெஞ்சுப் படைகள் பல முக்கிய இடங்களைக் கோட்டை விட்டனர். ஹனோய்க்கு 60 மைல் வடமேற்கில், சிவப்பு நதியின் தென் கரையிலுள்ள என்பே என்ற பிரதான நகரமே கொரில்லாப் படையினரின் அடுத்த இலக்கு என்று பிரெஞ்சு உளவு இலாகா கண்டுபிடித்துவிட்டதாம்.

இந்தோ-சீனாவின் பிரெஞ்சு சேனாதிபதி ஜெனரல் ரவுல் ஸலான் இன்று செய்கோனிலிருந்து ஹனோய்க்குப் பறந்து சென்று, உயர்தர அதிகாரியிடம் அவசர அவசரமாக சம்பாஷணைகள் நடத்தியுள்ளதாகத் தெரிகிறது.

வடக்கில் வெள்ளம் போல் திரண்டு வரும் கம்யூனிஸ்ட் படைகளை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று பிரெஞ்சு ராணுவத் தலைவர்கள் அலறுகின்றனர்.

கொள்ளைக்காரர்களுக்குள் குத்து, வெட்டு

ஜப்பான்மீது சிங்மன்ரீ குற்றச்சாட்டு

டோக்யோ, அக். 19—

ஜப்பான தன்னுடைய ஆக்கிரமிப்பை மீண்டும் தொடங்குகிறது என்று தென்கொரிய அமெரிக்கக் கைப்பாவை சிங்மன்ரீ இன்று ஜப்பானிய சர்க்காரைக் கண்டித்து பூசானிலிருந்து ஒரு அறிக்கை விட்டுள்ளார்.

ஏமாற்றுதல், மோசடி செய்தல், ஆக்கிரமிப்பிலிறங்குவது முதலிய பரம்பரை பரம்பரையான தந்திரங்களில் ஜப்பான மீண்டும் இறங்கியுள்ளதாம்.

கொரிய ஆதிக்கத்திற்குட்பட்ட கடலில் ஜப்பானியர் சட்ட விரோதமாக மீன் பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்களாம். ஜப்பானிய பொருள்களை இருட்டுத்தனமாக கொரியாவில் கொண்டுவந்து விற்பனை செய்கிறார்களாம்.

ஜப்பானில் 7 லட்சம் கொரியர்கள் இருக்கிறார்களென்றும் அவர்கள் அன்னியப் பிரஜைகள் என்ற முறையில் ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஜப்பானியசர்க்கார் அறிவித்துள்ளது. ரிஜிஸ்டர் செய்து கொண்ட கொரியர்களுக்கும், செய்துகொள்ள மறுத்த கொரியர்களுக்கும் பலத்த சண்டைகள் ஏற்படுகின்றனவாம். கொரியர்களை ஜப்பானியர்கள் மிதித்து, நசுக்கிக் கொல்லுகிறார்களென்றும் ரீ குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கப் படைகள் தோல்வி 5 விமானங்கள் பலி!

லண்டன், அக். 19—

கொரியாவில் கும்வா பிரதேசத்தில் 10-க்கு மேற்பட்ட டாங்குகளுடனும் விமானங்களுடனும் இரண்டு அமெரிக்கப் பட்டாளங்கள் 5 முறை பயங்கர தாக்குதல்கள் நடத்தின. கம்யூனிஸ்டு துருப்புகள் வசமுள்ள ஒரு மலையைப் பிடிக்க முயற்சி செய்தன. ஆனால் பலத்த சேதத்துடன் அப்படைகள் திரும்பி ஓடும்படி ஏற்பட்டன என்று வடகொரிய யுத்த அறிக்கையொன்று வெளியானதை டாஸ் செய்திஸ்தாபனம் அறிவித்தது.

மேலும் 5 அமெரிக்க விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன, ஐந்துக்கு சேதமேற்பட்டது என்றும் அது அறிவித்தது.

கொரியப் போர்நிலைமை தென் கொரியரும் அமெரிக்கரும் திணறல்

டோக்யோ, அக். 18—

மத்திய கொரியாவின் சீனத் தொண்டர் படையின் வசத்திலிருந்த ஒரு குன்றைப் பிடிப்பதற்காக அமெரிக்கர்கள் பெரும் சண்டை நடத்தினர். ஒரு குன்றை அமெரிக்கத் துருப்புகள் பிடிக்கவும் செய்தன.

ஆனால் சீனத் துருப்புகள் உடனேயே பலத்த எதிர்த்தாக்குதலையும் ஆரம்பித்தனர். இறுதியில் சீனர்கள் அக் குன்றைத் திரும்ப மீட்டனர். அமெரிக்கப் படைகளைத் துரத்தியடித்தனர்.

ஆனால் அமெரிக்கப் படைகள் மீண்டும் அதிக பலத்துடன் திரும்பி வந்து, மறுபடியும் அக்குன்றைத் திரும்பப் பிடித்து விட்டனர் என்று ராய்ட்டர் செய்தி அறிவிக்கிறது.

இரும்புக் குதிரை மலை என்ற ஒரு குன்றிலிருந்து தென் கொரியப் படைகளை விரட்டி சீனப்படைகள் அதைப் பிடித்துக் கொண்டு விட்டன.

வடகொரிய வானில் அமெரிக்கப் போர் விமானங்களுக்கும், வடகொரிய விமானங்களுக்கும் கடும் சண்டை நடந்தது.

ஆப்பிரிக்காவில் மலான் போலீஸ் துப்பாக்கிப்பிரயோகம்

போர்ட்எலிஜெபத், அக். 18—

போலீசார் இன்று நியு பிரைட்டன ரயில்வே நிலையத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த ஆப்பிரிக்கர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதுசம்பந்தமாக கேள்வி கேட்கப்பட்டதற்கு போலீஸ் அதிகாரி பதில் சொல்ல மறுத்தார்.

குறைந்தபக்ஷம் குண்டடிப்பட்டு இரு ஆப்பிரிக்கர்கள் காயமடைந்துள்ளனர் என்று தெரிகிறது.

கோபமடைந்த மக்கள் மக்கள் ரயில்வே ஸ்டேஷனில் ஆபீஸ்களையும் உள்ள ஜன்னல்களையும், நொறுக்கி விட்டனர். பிளாட்பாரத்தில் கற்கள் குவிந்துகிடக்கின்றன.

இந்தியா-பாகிஸ்தான் நல்லுறவுக்கு மே. வ. கம்யூனிஸ்ட் கட்சி திட்டம்

சர்வ கட்சி நல்லெண்ண தூதுகோஷ்டிகளை பரிமாறிக் கொள்க

அகதிகளுக்கு நிலமும், வீடும், வேலையும் தருக

நேருவிடம் தோழர் ஜோதிபாசு பேட்டி

கல்கத்தா, அக். 19—

மேற்கு வங்க கம்யூனிஸ்ட் தலைவர், தோழர் ஜோதிபாசு (எம். எல். ஏ) நேற்று கல்கத்தா வந்திருந்த பண்டிட் நேருவை 15 நிமிஷம் சந்தித்துப் பேசினார்.

மேற்கு, கிழக்கு வங்காளங்களிடையில் கொண்டு வரப்பட்டுள்ள “பாஸ்போர்ட்” (பிரயாண அனுமதிச் சீட்டு) முறையைப் பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தை விளக்கும் யாதாஸ்து ஒன்றை தோழர் ஜோதிபாசு, நேருவிடம் சமர்ப்பித்தார்.

இப்பிரச்னையை கம்யூனிஸ்ட் கட்சி எப்படி அணுகுகிறது என்பதை விளக்குகையில் தோழர் ஜோதிபாசு, இப்பிரச்னை சம்மந்தமாக சியாமப் பிரசாத் முகர்ஜியோ, அல்லது வங்க சட்டசபையிலுள்ள இதர எதிர்க்கட்சித் தலைவர்களோ கொண்டுள்ள கருத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தை கம்யூனிஸ்ட் கட்சி கொண்டுள்ளது என்றார்.

அவர் சமர்ப்பித்த யாதாஸ்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

“பாஸ்போர்ட்” முறையை இந்திய சர்க்கார் விரும்பவில்லையென்றால் மீண்டும் இப்பிரச்னையைப்பற்றி விவாதத்தைத் துடங்க இந்திய சர்க்கார் முன் கையெடுக்க வேண்டும்.

“பாகிஸ்தானுக்கு எதிராக பொருளாதார நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது, பாகிஸ்தானுடன் வர்த்தக உறவுகளை முறித்துக் கொள்வது ஆகியவைகளை இந்திய சர்க்கார் கையாளக் கூடாது. அதற்கு மாறாக இருதரப்பாரிலிருந்தும் சர்வ கட்சி நல்லெண்ணத் தூதுகோஷ்டிகளை அனுப்பிவைக்க வேண்டும்.”

கல்கத்தாவிலுள்ள அரண்மனைகள் போன்ற பெரிய கட்டிடங்களையெல்லாம் சர்க்கார் வசப்படுத்திக்கொண்டு, வீடில்லாதவர்களுக்கு வசிக்கக் கொடுக்க வேண்டுமென்றும், விவசாயத் தொழிலாளிகளாயுள்ள அகதிகளுக்கு சர்க்கார் நிலமளிக்க வேண்டுமென்றும், அந்த யாதாஸ்தில் மே. வங்க கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

கிழக்கு வங்கத்திலிருந்து வரும் அகதிகளுக்கு வேலை கொடுப்பதற்கு பலவித வர்த்தக, தொழில் அபிவிருத்தி வேலைகளை சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமென்றும் அந்த யாதாஸ்து கோருகிறது.

பெவானுக்கு ஆட்லியின் இறுதி எச்சரிக்கை

தன் கோஷ்டியை கலைத்துவிட்டு பணிந்துபோக வேண்டுமாம்

லண்டன், அக். 17—

தொழிற்கட்சிக்குள் இருக்கும் தன் இடதுசாரி கோஷ்டியைக் கலைத்துவிட வேண்டுமென்றும் பார்லிமெண்டிலுள்ள இதர தொழிற்கட்சி உறுப்பினர்களைத் தாக்கிக்கொண்டிருப்பதை நிறுத்த வேண்டுமென்றும் கோரி அனுரின் பெவானுக்கு இறுதி எச்சரிக்கை விடுப்பதென தொழிற்கட்சித்தலைவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

இத்தீர்மானம் பார்லிமெண்ட் தொழிற்கட்சிக் கூட்டத்தின்முன் வைக்கப்படும். கூட்டத்தில் இத்தீர்மானம் தோற்கடிக்கப்பட்டால் பார்லிமெண்ட் கட்சியிலிருந்து ஆட்லி மாரிசன், டால்டன் போன்ற தொழிற்கட்சிப் பிரமுகர்கள் ராஜினாமா செய்து விடுவார்களாம். ஆனால் தீர்மானம் நிறைவேறிவிட்டால், பெவான் இதற்கு உட்பட்டு நடக்க வேண்டியிருக்கும் அல்லது அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்.

பார்லிமெண்டில் மொத்தம் 296 தொழிற்கட்சி உறுப்பினர்கள் இருக்கின்றனர். இதில் சுமார் 30 பேர் பெவானை ஆதரிக்கின்றனர்.

கட்சிக்குள் கட்சி கட்டுவதாக தனமீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை அனுரின் பெவான் மறுத்தார்.

ராம்சே மாக்டொனல்டும், இதர வலதுசாரித் தலைவர்களும் தொழிற்கட்சியிலிருந்து 1931ல் விலகியபோது ஏற்பட்ட பெரும் நெருக்கடியைப் போலவே இப்பொழுதும் தொழிற்கட்சிக்குள் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இந்தோனேசியப் பார்லிமெண்ட் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது

வெகுஜன ஆர்ப்பாட்டத்தின் விளைவு

ஜாகர்த்தா, அக். 18—

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை முன்னிட்டு, இந்தோனேசியப் பார்லிமெண்ட் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக உதவி ஜனாதிபதி இன்றிரவு அறிவித்தார்.

பார்லிமெண்டைக் கலைத்துவிடும்படி ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

டாங்குப் படையும், கவச மோட்டார் படைகளும், ராணுவமும் நேற்று வீதிகளில் ரோந்து சுற்றின. இன்று ஆர்ப்பாட்டங்கள் ஏதுமின்றி, நகர் பூராவும் அமைதியாக இருக்கிறது.

பாதுகாப்பு மந்திரி இலாகா ஊழல்களை விசாரிக்க ஒரு அரசாங்கக் கமிஷன் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று இந்தோனேஷிய தேசியக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சி முதலிய இடதுசாரிக் கட்சிகளும் பார்லிமெண்டில் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை பாதுகாப்பு மந்திரி நிராகரித்தார்.

இத்தீர்மானத்தின்விளைவாக பாதுகாப்பு மந்திரி ராஜினாமா செய்ய நேரிட்டால், இந்தோனேஷி[illegible] காரே [illegible] விடு[illegible] மை [illegible]

2 வாரங்களாகப் பார்லிமெண்டில் விவாதம் நடைபெற்றது.

இந்தோனேஷியாவில் புரட்சி ஏற்பட்டு, சர்க்காரை ஒரு சிலர் கைப்பற்றி விட்டதாக வெளியான வதந்தியை உள்நாட்டு மந்திரி மறுத்தார்.

நேற்று டச்சுக் கொடியை ஊர்வலத்தினர் கிழித்தெறிந்ததற்கு, டச்சு சர்க்கார் தம் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கோபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக மாஜிப் பிரதமர் சுகிமானும், இன்னும் சில பார்லிமெண்ட் உறுப்பினர்களும் போலீஸ் பந்தோபஸ்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

பத்திரிகைகளுக்குத் தடை

[illegible], பெரிடா இந்[illegible] யா என்ற இரண்டு [illegible] மத் அல்லா [illegible] மெம்பார் இந்தோ[illegible] இரு வாரப் [illegible] செய் [illegible] கை காரி[illegible] சில் வைக்[illegible]

அன்னிய ஸ்தானிகர்களுக்கு மாஸ்கோவில் பூரணவசதி உண்டு

அமெரிக்க அவதூறுக்கு ஸ்விஸ் ஸ்தானிகர் மறுப்பு

பம்பாய், அக். 18—

மாஸ்கோவில் உள்ள மேற்கத்திய ஸ்தானிகர்களும், அவர்களின் காரியாலய அதிகாரிகளும் சுதந்திரமாக சோவியத் யூனியனில் எங்கும் செல்ல முடியாமல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சோவியத் யூனியனிலிருந்து அமெரிக்க ஸ்தானிகர் ஜார்ஜ் கென்னன் கூறிய அவதூறை இந்தியாவிற்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஸ்விட்ஜர்லாந்து ஸ்தானீகர் மாக்ஸ் கிராஸ்டி மறுத்தார்.

இவர் மூன்று வருடங்களுக்கு முன் மாஸ்கோவில் ஸ்விட்ஜர்லாந்தின் ஸ்தானீக அதிகாரியாக பொறுப்புவகித்திருந்தார்.

இதர எல்லா தேசங்களையும் போலவே, சோவியத் யூனியனிலும், அன்னிய ராஜதந்திரிகளுக்கு வசதிகளும், சலுகையும், அளிக்கப்படுகிறதென்றும், சோவியத் யூனியனில் அவர்கள் இஷ்டப்பட்ட இடத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் மாக்ஸ் கிராஸ்டி கூறினார். சோவியத் யூனியனை அவதூறு செய்து சமீபத்தில் பெர்லினில் கென்னன் பேசியதும், அதன் காரணமாக அவரை சோவியத் யூனியனிலிருந்து வாபஸ் பெறும்படி சோவியத் சர்க்கார் அமெரிக்காவிற்கு விடுத்துள்ள தாக்கீதும் ஏற்கனவே பிரசுரமாயுள்ளன.

5000 அகதிகள் அந்தமானில் குடியேற்றப்படுவர்

நேரு அறிவிப்பு

கல்கத்தா, அக். 18—

மேற்கு வங்க சர்க்கார் சமர்ப்பித்த யாதாஸ்துக்கு பதிலளிக்கும் போது பிரதம மந்திரி நேரு, 5000 கிழக்கு வங்க அகதிகளை அந்தமான தீவில் குடியேற்ற ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக இன்று கூறினர்.

மொழிவாரி மாகாண அமைப்பு

எல்லைக் கமிஷன் தேவை

பம்பாய், அக். 18—

மலையாளி ஐக்கிய கேரள மகாநாட்டை துவக்கிவைத்த டாக்டர் லங்காசுந்தரம் மொழிவாரி மாகாணங்கள் அமைய வேண்டுமெனபது 30 வருஷங்களுக்குமுன் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் அதற்காக இன்றைக்கும் போராடவேண்டி இருக்கிறது என்றார்.

மேலும் பேசுகையில் மொழிவாரி மாகாணங்கள் அமைக்க எல்லைக் கமிஷன் ஏற்படுத்த வேண்டுமென்றும் எல்லைத் தகராறுகளையும், சிறுபான்மையோர் பிரச்னைகளையும் கவனிக்க சுப்ரீம் கோர்ட் ஒரு விசேஷ பெஞ்சு ஏற்படுத்த வேண்டுமென்றும் கோரினார்.

இந்த மகாநாடு வெகு சமீபத்திலேயே நடந்த மற்றொரு மலையாளிகள் மாநாட்டில் பிரதம மந்திரி நேருவின் சட்டசபைக் காரியதரிசியான திருமதி லட்சுமி மேனன் மலையாளிகள் பாஷாவாரி மாகாணம் கேட்பது இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்குமென்று கூறினர்.

"அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை. அரசியல் சட்டத்தின் மூலம் அது பரிபூரணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்."

ஜனசக்தி

ஞாயிற்றுக்கிழமை 19-10-'52

சோவியத் கட்சி மகாநாடு—2

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் விவாதித்த மிக முக்கியமான விஷயங்களில் 5-வது (1950-55) ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றாகும். இது ஏற்கனவே அமுலில் இருக்கிறது. ஐந்து கடல்களை ஒன்றாக இணைத்து, நீர்ப்பாசனத்தைப் பெருக்கி, பாலைவனங்களைப் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகளாக்க உதவும் வால்கா-டான் கால்வாய் நான்கு மாதங்களுக்கு முன்புதான் திறந்து வைக்கப்பட்டது.

புராணத்தில் கேள்விப்படுகிற மயனின் அற்புத சிருஷ்டித்திறனும் வெட்கித் தலை குனியும்படியாக விளங்கும் சோவியத் மக்களின் சிருஷ்டித்திறன் வால்கா-டான் கால்வாய்த் திட்டம்போன்ற பல பிரம்மாண்டமான கம்யூனிஸ்ட் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றும். எல்லா துறைகளிலும் உற்பத்தி பெருகும். யுத்தத்திற்கு முன்பு 1940ல் சோவியத் யூனியனின் மொத்த உற்பத்தி அளவைவிட 1955ல் மொத்த உற்பத்தி அளவு மும்மடங்காகப் பெருகும். வறட்சி, மழையின்மை, உஷ்ணக் காற்று என்கிற இயற்கையின் கொடுமைகளையும் கோளாறுகளையும் வென்று சாஸ்வதமான சுபீட்சத்திற்கு இந்தத் திட்டம் வழிவகைகளைத் தேடித் தருகிறது.

இது திட்டமிட்ட பொருளாதாரம். ஏகாதிபத்யச் சுரண்டலுக்கோ, டாடா பிர்லாக்களின் லாபத்துக்கோ இயங்கும் நசிவுப் பொருளாதாரமல்ல. எனவே, அங்கு உற்பத்திப் பெருகப் பெருக சோவியத் மக்களின் வாழ்க்கைத்தரமும், கலாச்சாரமும் உயர்ந்துகொண்டே யிருக்கும்.

திட்டமிட்ட பொருளாதாரமாக இருப்பதால் சோவியத் யூனியன் நெருக்கடியற்ற, திடமான சந்தையாகவும் விளங்குகிறது. புதிய சீன, புதிய ஜனநாயக நாடுகளுடன் பொருளாதார உறவுகளை பலப்படுத்திக்கொள்ள இந்த ஐந்தாண்டு திட்டம் அஸ்திவாரமிடுகிறது.

அதுமட்டுமல்ல, பொருளாதார நெருக்கடி, மந்தம் என்கிற வாத நோயால் பீடிக்கப்படுகிற முதலாளித்துவ நாடுகளுக்கும், இந்தியாபோன்ற காலனிநாடுகளுக்கும் சோவியத் யூனியன் ஒரு நம்பகமான சந்தையாகவும் விளங்கும். இந்த நாடுகள் அனைத்தும் சோவியத் யூனியனுடன் வியாபார உறவுகளை—அமெரிக்கத் தடையுத்தரவுகளையும் டாலர் கடன் நிர்ப்பந்தங்களையும் சட்டைபண்ணாமல்—ஏற்படுத்திக் கொண்டால் உலக சாந்திக்கும், உலக முற்போக்குக்கும் பெருதவியாக இருக்கும்.

இவையாவும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் என்று சோவியத் கட்சி காங்கிரஸ் பிரகடனப் படுத்தியிருக்கிறது.

"இந்தத் திட்டம் அற்புதமானது" என்று லண்டன் பினான்ஷியல் டைம்ஸ் (பிரிட்டிஷ் ஏகாதிபத்ய முதலாளிகளின் பத்திரிகை) ஒப்புக்கொள்கிறது. "பிரம்மாண்டமான வளர்ச்சிக்கு இத்தத்திட்டம் வழி செய்கிறது" என்கிறது டச்சு கத்தோலிக்க பத்திரிகை டிஜிட். "ஆக்கிரமிப்பு நோக்கங்களை இத்திட்டத்திற்கு கற்பிக்க ஆதாரம் லவலேசமும் இல்லை" என்கிறது அமெரிக்க முதலாளித்துவ பத்திரிகை பிசினஸ் வீக் "சமாதானத்தைத் தவிர வேறெதற்கும் சோவியத் யூனியன் வேலை செய்யவில்லை. யுத்தம் என்பது சோஷலிஸத்தின் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத விஷயம் என்கிறது. அமெரிக்க பத்திரிகை நியூயார்க் டெய்லி காம்பஸ் முதலாளித்துவ முறையைவிட சோஷலிஸ்ட் முறை எவ்வளவோ நேர்த்தியானது, மேலானது என்று குறிப்பிடுகிறது.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் சமுதாய அமைப்புக்கு பலமான அஸ்திவாரம் போடவும், உலக சமாதானத்துக்கும், உலகப் பொருளாதார உறவுகளுக்கும் திடமான அடிப்படை அளிக்கவும், செயல்படுகிற இந்த மகத்தான ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலாளித்துவப் பத்திரிகைகள் கதர்ப்போர்வை போட்டு இரும்புத்திரையிட்டு மறைக்க முயற்சிப்பது வீண்.

இந்த சமாதான சுபீட்ச இலட்சியத்துக்காக உழைக்கும் சோவியத் யூனியனைத்தான் யுத்த முஸ்தீபுகள் செய்வதாகவும், ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டதாகவும் ஏகாதிபத்ய வாதிகள் தூற்றுகிறார்கள். உண்மையாகப் பார்த்தால் சோவியத் யூனியன் தனது எல்லைக்கு வெளியே யுத்த தளங்களை அமைக்க அலைந்து திரியவில்லை; சோவியத் சேனைகள் தாயகத்தின் எல்லைக்கு வெளியே தலைநீட்டவேயில்லை; சோவியத் படைகளின் எண்ணிக்கை அளவு யுத்தத்திற்கு முந்திய 1940 ம் ஆண்டின் அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது.

"கெஞ்சினால் மிஞ்சுவது" என்கிற தத்துவப்படி இயங்கும் ஏகாதிபத்ய வாதிகளுக்கு சமாதானத்திற்காக பாடுபடும் சோவியத் யூனியனை சோளக்காட்டு பொம்மையாக மட்டும் நினைத்து விடாதே என்று கட்சி காங்கிரஸ் எச்சரித்துள்ளது.

ஹிட்லர்—முஸோலினி—டோஜோ வீழ்ச்சிப் படலத்தை மறக்கத் துணிந்து அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கும்பல்கள் மீண்டும் போர் முஸ்தீப்புகளில் இறங்கியுள்ளன. தத்தம் ஏகாதிபத்திய நலன்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அமெரிக்க எஜமானனிடம் தத்தம் நாட்டை அடகு வைத்து விட்டன. இந்த சூழ்நிலைகளில்தான் முதலாளி வர்க்கம், தேச விடுதலைக்கும், அரசுரிமைக்கும், பிரஜா உரிமைகளுக்கும் துரோகம் செய்து பலவீனப்பட்டு பிற்போக்காகி விட்டன என்று ஸ்டாலின் குறிப்பிட்டார். அந்த புனிதமான நலன்களைக் காக்க தொழிலாளி வர்க்கத்தின் கட்சியாகிய கம்யூனிஸ்டுக் கட்சிகள் மட்டுமே கொடி உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்று ஸ்டாலின் கூறினர்.

மேலும், சோவியத் யூனியனுக்கு உலக மக்கள் காட்டி வரும் ஆதரவைப் பற்றி விளக்குகையில் உலக மக்கள் தத்தம் நலன்களுக்காக, சமாதானத்துக்கும் சுதந்திரத்துக்கும் போராடுவதையே முதன்மைப்படுத்துகிறார்கள். அதுவே சோவியத் யூனியனின் நலன்களுடன் இரண்டறக் கலக்கிறது என்று விவரித்தார். இந்தத் துறையில் செயல்பட்டு உலக மக்களுக்கும், சோவியத் மக்களுக்குமிடையே ஆதரவைப் பெருகச் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இதர நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு உதவியாக நிற்கும் என்றும் ஸ்டாலின் கூறினர். இதில் ஏதோ "மாஸ்கோ சதி" இருப்பதாகவும், "ஐந்தாம்படைவேலை" திட்டமிடப்படுவதாகவும் ஏகாதிபத்தியங்கள் ஊளையிடுகின்றன. புரட்சி என்பது ஒரு சிறு கும்பலின் சதியல்ல, அது ஒரு நாட்டு மக்களின் சித்தப்படி நடத்தேறும் பொருளாகும் என்பதை சீனப் புரட்சி மீண்டும் மீண்டும் மெய்ப்பித்துள்ள பிறகும் இந்தக் கட்டுக்கதையை ஏகாதிபத்தியவாதிகள் வாந்திபெடுக்கின்றனர். பாரிஸில் உலக ஏகாதிபத்தியங்கள் கூடிப்பேசினால் அது சமாதானத்துக்காக! பிராங்பர்டில் உலக "சோஷலிஸ்டுகள்" கூடிப்பேசினால் அது மக்கள் நலனுக்காக! ஆனால் மாஸ்கோவில் கம்யூனிஸ்ட்கள் கூடிப்பேசினால், வந்தது ஆபத்து, அராஜகம், புரட்சி! என்ன கபட நாடகம்! என்ன குறும்புத்தனமான புரளி!

மாஸ்கோவிலிருந்து ஏ. கே. கோபாலன் புரட்சியைப் பார்சல்செய்து கொண்டுவரப்போவதில்லை. சோவியத் மக்களின் நல்லெண்ணத்தையும், நல்லாசியையும்தான் கொண்டு வருவார், இந்திய மக்களிடம் சமர்ப்பிக்க! வேறு அணுகுண்டு ஆயுதங்களும் அவர் கொண்டுவரமாட்டார். அணுகுண்டைவிட வலிமை படைத்திய ஆயுதம் தொழிலாளி வர்க்கத்திடம் உண்டு. அதுதான் மார்க்ஸிஸம்—லெனினிசம் என்கிற சித்தாந்தம்.

அந்த சித்தாந்தத்தின் மகிமையையும், சாதனைத்திறனையும் சோவியத்கட்சி மகாநாடு மீண்டும் ருசுப்பித்துவிட்டது. அதைக்கண்டுதான் பிற்போக்கு முகாம் அலறிச்சாகிறது.

திண்டுக்கல் நகர சபைக்கு 11-வது வார்டில் உபதேர்தல்

திண்டுக்கல், அக். 16—

திண்டுக்கல் நகர சபைத் தேர்தலில் 11, 12 ஆகிய இரண்டு வார்டுகளிலும் தோழர் ஏ. பாலசுப்ரமணியம் ஜெயித்தார். ஆகவே, 11-வது வார்டில் அவர் தன்னுடைய ஸ்தானத்தை ராஜிஞமா செய்தார். அந்த ஸ்தானத்திற்கு நடைபெற விருக்கும் உப தேர்தலில், மக்கள் கூட்டணியின் சார்பில் தோழர் சந்தியாகு நிறுத்தப்பட்டுள்ளார்.

அவரை ஆதரித்து 15-10-52-ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ஏ. பாலசுப்ரமணயம் கடந்த தேர்தலில் தன்னை வெற்றி பெறச் செய்த மக்களுக்கு நன்றி கூறிவிட்டு, இந்த உப தேர்தலிலும் கூட்டணி அபேட்சகரையே ஆதரிக்கும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார்.

பிறகு ரேஷன் கார்டுகளுக்கு முழு ரேஷனும் கொடுக்கும்படி வற்புறுத்தியும், 11-வது வார்டில் மிகவும் தூரமாயுள்ள ஏ.எம். ஸி. காம்பவுண்டிலுள்ள போலிங் ஸ்டேஷனை, ஆரோக்கிய மாதா தெருவிலுள்ள எலிமெண்டரி பள்ளிக்கு மாற்றும்படியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் தமிழர் சங்கம்

பம்பாய், அக். 15—

12-10-52ல் பம்பாய் தமிழர் சங்கத்தின் ஆரம்பப் பொதுக் கூட்டம், சங்கத் தலைவர் உயர் திரு, எம். வி. துரைசாமி அவர்கள் தலைமையின் கீழ் நடந்தேறியது. கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கான தமிழர்களும், ஏராளமான பார்வையாளர்களும் வந்திருந்தனர். செயலாளர்கள், இ தில்லை நடராஜன்; ஆர். சி. பாலுஞசம் அவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து சங்கத்தின நோக்கங்கள் பற்றிப் பேசினார்கள். தலைவர் முகவுரைக்குப்பின், திருவாளர்கள்: ச. நடராஜன், ஆர். இ. வேலு, ஆர். குசலவசேட், எஸ். பொன்னையா நாடார், ந. சிவபாண்டியன், எஸ். வள்ளிநாயகம், பி. வி. ஆழ்வார், அ. திருமலைத் தேவர், எம். என். மோசஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரையில், பம்பாய்த் தாராவித் தமிழர்களிடையே கல்வி, சுகாதாரம், அன்புணர்ச்சி ஐக்ய மனோபாவம் முதலியவை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வு வளம் பெறுவதற்கான செயல்களை உருவாக்க இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது எனக் குறிப்பாகக் கூறினர். செயலாளர் எல். எம். கந்தசாமி அவர்கள் வந்தனோபசாரம் கூற, கூட்டம் முடிவுற்றது.

சென்னை சோஷலிஸ்டுகள் மகாநாடு

பிரஜா-சோஷலிஸ்ட் இணைப்பிற்கு கண்டனம்

சென்னை, அக். 18—

எஸ் சி, சி. அந்தோணிப் பிள்ளையின் தலைமையில் இன்று புரசவாக்கத்தில் கூடிய சோஷலிஸ்டுகளின் மகாநாட்டில் பிரஜா-சோஷலிஸ்ட் இணைப்பைக் கண்டித்தும், சோஷலிஸ்ட் கட்சியின் ஜெனரல் கவுன்சில் சமீபத்தில் பம்பாயில்கூடி பிரஜா கட்சியுடன் இணைந்துவிடுவதென்று முடிவெடுத்தது செல்லத்தக்கதல்ல வென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"ஜனநாயக சோஷலிஸத்தின்" அடிப்படையில் கட்சியைப் புனருத்தாரணம் செய்யும பொருட்டு, எஸ். சி. சி. அந்தோணிப்பிள்ளை எம்.எல்.ஏ., எம். வெங்கடசுப்ப ரெட்டி எம்.எல்.ஏ., எம். கிருஷ்ணன ஆகியோரைக் கொண்ட அட்ஹாக் கமிட்டி ஒன்று நிறுவப் பட்டுள்ளது. பம்பாய் சோஷலிஸ்டுகள் ஏற்படுத்தி கொண்டுள்ள இதைப் போன்ற ஒரு கமிட்டியுடன இந்த அட்ஹாக் கமிட்டி ஒத்துழைக்கும்.

தீர்மானங்கள்

சமீபத்தில் பம்பாயில் கூடிய சோஷலிஸ்ட் கட்சி ஜெனரல் கவுன்சில் கூட்டம் கட்சியைக் கலைத்து விட்டு பிரஜா-கட்சியுடன் இணைந்து விடுவதென முடிவெடுத்தது சட்டவிரோதமாகுமென்றும ஜனநாயகமான முடிவல்லவென்றும் இந்த முடிவு சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தாதென்றும் கட்சியின் மகாநாட்டைக் கூட்டி மூன்றில் இரு பங்கு மெஜாரிட்டியுடன் நிறைவேற்றப்பட்டால் தான் இத்தகைய ஒருமுடிவை எடுக்க முடியுமென்றும் கூறி ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பிரஜா-சோஸலிஸ்ட் கட்சி மார்க்ஸத்தைப் புறக்கணித்துள்ளதாலும், வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு, விட்டு, தனிப்பட்ட சில அரசியல் வாதிகளின் பதவி ஆசையின் அடிப்படையில் இக் கட்சி தன அரசியலை வகுத்துக் கொண்டிருப்பதாலும் இதை ஒரு சோஷலிஸ்ட் கட்சி என்று கருத முடியாதென்று இத்தீர்மானம் கூறுகிறது. காங்கிரசிலிருந்து இக் கட்சி எந்த வகையிலும் மாறுபட்டிருக்கவில்லையென்றும் கூறுகிறது.

எனவே உண்மையான சோஷலிஸ்டுகள் சோஷலிஸ்ட் தலைவர்களைப் பின்பற்றுமல், சோஷலிஸ்ட் கட்சியின பாரம்பர்யத்தையும் அதன் வேலைத் திட்டத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டுமென அது கோருகிறது.

அந்தோணிப்பிள்ளை பிரசங்கம்

இன்றைய பிரச்சினைகள் குறித்தும், இந்த கோஷ்டி இனி நடைமுறையில் பின்பற்றப்போகும் கொள்கையை விளக்கியும் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அந்தோணிப்பிள்ளை தன பிரசங்கத்தில் எந்த திசையில் செல்லவேண்டுமென்பது பற்றிச் சுட்டிக்காட்டினர். கம்யூனிஸ்டுகள் அமைத்து வரும் ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கு எதிராக தாங்கள் இதர சோஷலிஸ்டுகளுடன் ஒன்றுபட்டு ஒரு "சோஷலிஸ்ட் முன்னணி"யைக் கட்ட வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார். கம்யூனிஸ்டுகள் மாஸ்கோ ஏஜெண்டுகளென்றும் ஜனநாயக விரோதிகளென்றும் கூறி அவர் காங்கிரஸ் தலைவர்களும் சோஷலிஸ்ட் தலைவர்களும் செய்து வரும் அவதூறு பிரசாரத்தை அப்படியே வாங்கியெடுத்தார். சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்களின் துரோகத்தைக் கண்டு விழிப்படைந்துள்ள சோஷலிஸ்ட் ஊழியர்கள் வளர்ந்து வரும் ஐக்கிய ஜனநாயக இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளுடன் ஒன்றுபட்டு நின்று செயலாற்ற முன்வராதபடி தடுப்பதே தன நோக்கமென்பதை அந்தோணிப் பிள்ளையின பிரசங்கம் தெட்டத் தெளிவாக்கிற்று.

காங்கிரஸுக்குள்ளேயே 1930ம் வருஷம் சோஷலிஸ்ட் கட்சி அமைந்தவரலாறு பற்றியும், பின்னர் அது காங்கிரசிலிருந்து வெளியேறி வந்தது பற்றியும் அந்தோணிப் பிள்ளை விளக்கிப் பேசினர். காங்கிரஸ் பிற்போக்கு கொள்கையை பின்பற்றுகிறதென்றும் கம்யூனிஸ்டுகள் சமூக மாறுதல் சம்பந்தமாய் சோஷலிஸ்டுகளின் கொள்கைக்கு மாறான கொள்கைகளையுடையவர்களென்றும் அவர் கூறினர். மாஸ்கோவின் கட்டளைக்கிணங்கி கம்யூனிஸ்டுகள் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொண்டு விடுவதாகவும் 1942-ல் அவர்கள் விநோதமான போக்கைப் பின்பற்றியதாகவும் அவர் அவதூறு செய்தார். இங்கிலையில் சோஷலிஸ்ட் கட்சி ஒன்றுதான முக்கியமான சமூக மாறுதல்களைக் கொண்டுவரக் கூடியது என்று பொதுமக்கள் பூரணமாக நம்பினரென்றும் ஆனால் சோஷலிஸ்ட் பிரஜா கட்சியுடன ஒன்ருக இணைந்து விட்டதால் உண்மையான சோஷலிஸ்டுகள், சோஷலிஸ்ட் தலைவர்களை எதிர்த்து நின்று உண்மையான "சோஷலிஸ்ட் கொள்கைகக்காக" பாடுபட வேண்டுமென்றும் கம்யூனிஸ்டுகள் அமைத்து வரும ஐ ஜ. மு. விற்கு எதிராக ஒரு "சோஷலிஸ்ட் அணியை"க் கட்ட வேண்டுமென றும் அவர் கூறினர்.

சோஷலிஸ்டுகள் "ஜனநாயக" முறையில் நம்பிக்கையுடையவர்கள் என்ருலுங்கூட சமூக மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு தேவைப்படும் போது புரட்சிகரமான முறைகளையோ நேரடிநடவடிக்கைகளோ அறவே கூடாதென அவர்கள் கூறவில்லை என்ருர்.

சென்ற தேர்தலில் தங்கள் கட்சி நாட்டில் இரண்டாவது பெருங்கட்சியாக வந்துவிடுமென சோஷலிஸ்ட் தலைவர்கள் எதிர்பார்த்திருந்தனரென்றும் ஆனல் தேர்தல் தோல்வி கள் அவர்களை மனச்சோர்வடையச் செய்ததென்றும் மார்க்ஸிஸத்தைப் புறக்கணித்து விட்டு காந்தீயம்பேசும் பிரஜா கட்சியுடன் இணைந்துவிடும்படிச் செய்ததென்றும் அவர் கூறினர்.

கட்சி உறுப்பினர்களின் அபிப்பிராயத்தைக் கேட்காமல் ஜெனரல் கவுன்சிலில் சோஷலிஸ்ட் தலைவர்கள் இணைப்பை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றியதை அவர் கண்டித்துப் பேசினர். சோஷலிஸ்ட் கட்சி இதுவரை மார்க்ஸியத்தை ஏற்றுக்கொண்டு வந்துள்ளதென்றும் ஆனல் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி அனேகமாய் காந்தியத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளதென்றும் குறிப்பிட்டுவிட்டு அவர் உண்மையான சோஷலிஸ்டுகள் இந்த இணைப்பை எதிர்த்து பழைய சோஷலிஸ்ட் கட்சியைப் பாதுகாக்க வேண்டுமென்றும் பம்பாயில் நிருவப்பட்டுள்ள அட்ஹாக்கமிட்டியை பலப்படுத்த வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்.

கூர்க்கப் படைகளைத் திரட்ட பிரிட்டன் வேறு ஏற்பாடு செய்யப் போகிறதாம்!

லண்டன், அக். 17—

இந்திய மண்ணில், பிரிட்டிஷ் ராணுவத்திற்கு நேபாளத்திலுள்ள கூர்க்கர்களைத் திரட்டும் தற்போதைய ஏற்பாட்டை முடிவுக்குக்கொண்டு வந்துவிட வேண்டுமென்று இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளதற்கு இணங்கவே நாங்கள் விரும்புகிறோம் என்று பிரிட்டிஷ் காமன்வெல்த்-உறவுகள் இலாகா உப காரியதரிசி ஜான் பாஸ்டர் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

மேலும், "இதற்கு வேறு ஏற்பாடுகளைச் செய்வதைப் பற்றி நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம்" என்றும் கூறினர்.

மீண்டும் வேறு விததத்தில் கூர்க்கப் படைகளைத் திரட்டும் போக்கையே இந்த பதில்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

பாகிஸ்தான் இந்தியாவுக்கு ஓரவஞ்சனை செய்கிறது

சணல் பிரச்னையில் இந்திய சர்க்கார் குற்றச்சாட்டு

ஜெனிவா, அக். 16—

34 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட காப்பு வரி, வர்த்தக பொது ஒப்பந்தக் கவுன்சில் கூட்டம் பாகிஸ்தான்மீது இந்தியா கொண்டு வந்துள்ள குற்றச்சாட்டை பற்றிய முடிவு தெரிவிப்பதை ஒத்தி வைத்துள்ளது. பாகிஸ்தான் இந்தியாவுக்கு சணல் ஏற்றுமதி செய்வதில், ஓர வஞ்சனை செய்கிறது என்பது இந்தியாவின் குற்றச்சாட்டு. இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சணலுக்கு லைசென்ஸ் கட்டணம் என்றும் மணங்கு சணலுக்கு ரூ. 2-8-0 வசூல் செய்யப் படுகிறது; இந்தக் கட்டணம் மற்ற நாடுகளிடம் வசூலிக்கப் படவில்லை என்று இந்திய சர்க்கார் பிரதிநிதி எல். ஆர். எஸ். சிங் கூறினர்.

இதுசம்பந்தமாக முன்பு இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் பரஸ்பரம் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றிய தகவல்களையும், தஸ்தாவேஜிகளையும் இந்திய பிரதிநிதி சமர்ப்பிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

சோஷலிஸ்ட் சர்வதேச நாடகம்!

மிலான், அக். 18—

சோஷலிஸ்டு சர்வதேசியத்தின் மகாசபை ஆசிய தேசங்களையும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொண்டு அதன் காரியக் கமிட்டியிலும் இடங்கொடுக்க முடிவு செய்தது. காரியக் கமிட்டியில் ஆசிய தேசங்களில் ஒன்றுக்கு இடம் ஒதுக்கி வைத்தது. ரங்கூனில் நடக்கப்போகும் ஆசிய தேசங்களின் சோஷியலிஸ்டு கட்சிகளின் மகாநாட்டிற்குப் பிறகு அந்த ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வது யாரென முடிவு கட்டப்படுமாம்.

ரங்கூனில் நடக்கப்போகும் ஆசிய சோஷலிஸ்டுக் கட்சிகள் தனியான ஸ்தாபனத்தை அமைத்துக் கொள்ளுமெனப் பயந்து சோஷலிஸ்டுகள் சர்வதேசியத்தின் சட்ட திட்டங்களை மாற்ற காங்கிரஸ், காரிய கமிட்டிக்கு அதிகாரமளித்துள்ளது.

மலேய தொழிற்கட்சிசோஷலிஸ சர்வ தேசியத்தின ஆலோசனை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

நாடெங்கும் நல்ல மழை

பூனு, அக். 19—

ஒரிஸ்ஸா கடற்கரையோரப் பிரதேசம், அதன் அருகிலுள்ள வங்கப் பகுதிகள், [illegible]

நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கு சர்க்கார் உத்திரவு

குடிசைவாழ் மக்கள் குடியிருக்க வேற்று இடம் கொடு!

சென்னை, அக். 17—

சென்னை நகரில் குடிசை கட்டிக்கொண்டு வாழும் ஏழை மக்கள் குடியிருப்பதற்குத் தகுதியுடைய வேற்று இடத்தைக் காட்டாமல் அவர்களை இந்த குடிசைகளிலிருந்து வெளியேற்ற வேண்டுமென நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கும் இதர வீடுகட்டும் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் சென்னை சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறதாம்.

எல்லிஸ் ரோடுபுரத்தில் ராஜாஜி கிராம சீர்திருத்த சங்கத்தை நேற்றுமாலை திறந்து வைத்து பேசுகையில், வீடு கட்டும் இலாகா, கூட்டுறவு இலாகா மந்திரி டி. சஞ்சிவையா மேற்கூறிய தகவலை வெளியிட்டார். நகர அபிவிருத்திடிரஸ்டு குடிசைகளை அகற்றி நகரை அபிவிருத்தி செய்ய முயன்றுவருவதாகவும், இவ் வேலையின்போது பல தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குடிசைகளிலிருந்து விரட்டப்பட்டு, அவர்களுடைய வேலை ஸ்தலங்களிலிருந்து வெகு தூரத்திற்கப்பால் குடியிருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதைத் தடுக்க வேண்டுமென்பதற்காக இவ்வாறு சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறதென்றும் அவர் கூறினர்.

நகரை அபிவிருத்தி செய்வதின் பெயரில் பல ஏழை மக்கள் பீச்சிலும், இதர இடங்களிலும் பல ஆண்டுகளாக வசித்துவந்த குடிசைகளிலிருந்து விரட்டியடிக்கப் படுகின்றனர். சொந்த சிலவில் இவர்கள் கட்டிக்கொண்டுள்ள குடிசைகள் நஷ்டஈடு கொடுக்கப்படாமலே பிரித்தெறியப்படுகின்றன. குடியிருக்கமுடியாதபொட்டல்களில் வசிக்கும்படி இம்மக்களுக்கு சட்டைபிறப்பிக்கப்படுகிறது. இந்த கொடுமையை எதிர்த்து கிளர்ச்சிகள் நடந்துள்ளன. குடியிருப்புக்கு வேற்று இடத்தைக் காட்டி விட்டால்மட்டும் போதாதென்றும் போதிய நஷ்டஈடு கிடைக்கும்படி உத்திரவாதமளிக்கப்பட வேண்டுமென்றும் வேலை ஸ்தலங்களுக்கு அருகில் குடியிருக்க வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்றும் மக்களால்ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய அத்தியாவசியமான காரணமின்றி குடிசைகளை விட்டு வெளியேற்றக் கூடாதென்று குடிசை வாழ் மக்கள் கோரி வருகின்றனர்.

காங்கிரஸ் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

ஜெய்ப்பூர், அக். 17—

ராஜஸ்தான் காங்கிரஸ் மந்திரி சபையின் மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றி இன்று 4 மணி நேரம் விவாதம் செய்து விட்டு ராஜஸ்தான் சட்ட சபை கலைந்தது. மீண்டும் சட்ட சபை அக். 21-ல் கூடும்.

நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றியவிவாதத்தை தகவனிக்க பார்வையாளர் மேடைகளில் பலர் குழுமியிருந்தனர்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தை பிரரேபித்துப் பேசுகையில் எதிர்கட்சி உபதலைவர் இந்திரநாத் மோடி, தன் கட்சியைச் சேர்ந்த தக்கூர் சிங் என்பவரை காங்கிரஸ் கட்சியில் சேறுமாறு ஆட்சியாளர் நிர்ப்பந்தம் செய்தனரென்று குற்றம் சாட்டினர். இதைப் பற்றிய தக்கூர் சிங்கின் அறிக்கை ஒன்றை அவர் சட்டசபை முன் வைத்தார். தக்கூர் சிங் ஒரு காங்கிரஸ் உறுப்பினரின் வீட்டில் அடைத்து வைக்கப்பட்டாரெனவும் அவரைத் தூக்கிச் செல்ல முயற்சி செய்யப்பட்டதென்றும் இந்திரநாத் மோடி கூறினர்.

தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் கானவார் அஸ்வண்ட்சிங் காங்கிரஸ் மந்திரி சபை தடுப்புக்காவல் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்தது என்றும் ஸ்தல ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளில் தலையிட்டதென்றும் குற்றம் சாட்டினர்.

கம்யூனிஸ்ட் உறுப்பினர் எஸ். கே. வியாஸ் தீர்மானத்தை ஆதரித்துப் பேசும் போது, ஜாகீர்தார்களுக்குக் காங்கிரஸ் ஆட்சியாளர் ஏராளமான நஷ்ட ஈடை வாரிக் கொடுத்தனரென்றும் பொருளாதார அபிவிருத்திக்காக சுண்டு விரலையுமசைக்கவில்லையென்றும் கூறி[illegible]

தீர்மானத்தை [illegible]த்து காங்கிரஸ் சட்டச[illegible] தலைவர் பேசினர்.

முடியுமுன் [illegible] டம் அக். 21[illegible] கப்பட்டது.

நாட்டுமணி

உலகம் பதவிப் பித்து மயம்!

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய இச்சைகளுக்கு இரையாகி, மனித குலம் இழிவடைந்து விட்டதாக வாழ்க்கைப் போராட்டத்தில் தோற்று நிராசையடைந்திருக்கும் மூதியோர்கள் கூறக் கேட்டிருப்பீர்கள். அதைப்போலவே, அரசியல் கடலில் இறங்கி, அலை மீது மோதி, உப்பு நீரைச் குடித்து நீச்சலடிக்க முயன்று கரையேற முடியாமல் கஷ்டப்படுகிறவர்கள், அரசியலைப்பற்றி அருவருப்புடனும் அடங்காத வெறுப்புடனும் பேசுவார்கள்! அவர்களுக்கு அரசியல் உலகமே பதவி மோஹ மயமாகத் தோன்றும்!

ஜனநாயகமா? அது வடிகட்டிய பித்தலாட்டம என்று விரித்துரைப்பார்கள்!

ஜனநாயக ஐக்கிய அணியா? துப்பாக்கியிலிருந்து பீரங்கி பிறந்ததைப் போல, ஜனநாயகமென்ற பித்தலாட்டத்திலிருந்து பிறந்த மகா மகா பித்தலாட்டம் ஜனநாயக ஐக்கிய அணி என்பார்கள்!

ஆந்திர மாகாணக் கோரிக்கையா? அப்பட்டமான, சுத்த சுயம்பிரகாசமான பதவிப்பித்தே இந்த கோரிக்கையின் தாய்! என்று கூறுவார்கள்!

முன்னாளில் இந்திய மக்கள் விடுதலைக்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியபொழுதும், இதே பகுத்தறிவுக் குஞறுகள், சுதந்திரக் கோரிக்கையை பதவிப்பித்தாக வர்ணித்தார்களென்பதை நினைவில் கொள்வது நல்லது!

ஜனநாயகம் பிரிட்டன அமெரிகா இந்தியாவிலும் இருக்கிறது; சீன, ருஷ்யா, செக்கோஸ்லவாகியாவிலும் இருக்கிறது.

பிரிட்டனிலும் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் பித்தலாட்ட ஜனநாயகம் மேனமை தங்கிய சிம்மாசனத்தில் திருவீற்றிருக்கிறது. பணம், பலாத்காரம், சண்டப்பிரசண்ட வாய்ச்சொல் வீரம், சாதிமதப் பித்துக்கள் முதலிய பேராயுதங்களைப் படைத்தவர்களின் கோட்டையாக அது விளங்குகிறது. இது பசிநாயகம், பணநாயகம் போலீஸ் நாயகம்!

ருஷ்யாவிலும், சீனவிலும் மக்களே-மன்னர்களாக விளங்கிருர்கள். மனிதனை மனிதன் சுரண்டும்முறைக்குமுடிவுகட்டிவிட்டு முன்னேறும் சோஷலிஸ்ட் ஜனநாயகம் சோவியத் ஆட்சியில்நிலவுகிறது. மூன்றே ஆண்டுகளில் இல்லாக் கொடுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அழியச்செய்துள்ள மக்கள் ஜனநாயகம் புதிய சீனவில் பேரரசு புரிகிறது!

யானைக்கும்பூனைக்கும் வித்தியாசம் தெரியாத குருடர்கள் தான், இந்திய, சீன ஜனநாயகங்களுக்கிடையேயுள்ள பேதாபேதத்தைப் பார்க்கமாட்டார்கள்.

வெண்ணையும் சுண்ணும்பும் ஒன்ருகாது. பித்தலாட்ட டாலர் நாயகமும், சோஷலிஸ்ட் சோவியத் நாயகமும் ஒன்ருகாது.

ஒரு கூடை செங்கல் அத்தனையும் பிடாரி என்பதைப் போல, "சித்திரபுத்திரன" ஜனநாயகத்தை பொதுவாகக் கேவலப்படுத்துவது எதற்காக? ராமராஜ்ய போலி ஜனநாயகத்தை எதிர்த்துப் போராடும் ஜனநாயகசக்திகளை கேலிசெய்து இழிவு படுத்துவதற்காக! அதனுல்தான ஐக்கிய ஜனநாயக முன்னணியை மகாப பித்தலாட்டமென்று வர்ணிக்கிருர்!

ஐ. ஜ. மு., ஆளும் கட்சிக்கு சிம்மசொப்பனமாக இருக்கிறது! ஸ்டாலின் பிரசங்கத்தைப்பற்றி தலையங்கம் எழுதும்போதுகூட, பிரஜா கட்சி ஐ. ஜ. மு.விலிருந்து விலகவில்லையே என்று ஹிந்து பத்திரிகை துயரப்படுகிறது. கொக்குக்கு ஒன்றேமதியாக, ஆளும் வர்க்கம் ஐ.ஜ.மு.வை உடைப்பதில் முனைந்து நிற்கிறது. அந்தப் பணியின வெற்றிக்கு சித்திரபுத்திரன் தனனல இயன்ற உபகாரம் செய்கிருர். பித்தலாட்டப் பிரசாரத்தின் பொருள் இதுவே.

ஆந்திர ராஜ்யக் கோரிக்கையும் அப்பட்டமான பதவிப் பித்துக் கோரிக்கை என்று விடுதலைப் பத்திரிகை தலையங்கம் தீட்டிவிட்டது.

ஐ. மு, எதிர்ப்பிலும் கண்டிரோல் ஒழிப்பு ஆதரவிலும் தொடங்கிய ராஜாஜிக்கும், பெரியாருக்கும் ஏற்பட்ட கருத்தொற்றுமை ஆந்திர மாகாண எதிர்ப்பில் முடிந்திருக்கிறது.

ஆச்சாரியார்கூட ஆந்திர மாகாணக் கோரிக்கையை பதவி வேட்டைக் கோரிக்கை யென்று பகிரங்கமாக எதிர்க்கத் துணியவில்லை, ஆனல் பெரியார் செய்து விட்டார்.

நாற்பது வருஷகாலமாக ஆந்திரமக்கள் மாகாணப் பிரிவினைக்காகப் போராடி வருகிருர்கள். நான்குவருஷகால [illegible] இந்தக் கோரிக்கை விசால ஆந்திரக் கோரிக்கையாக வளர்ந்து, தெலிங்கானவிலும், ஆந்திராவிலும், மக்கள் செயற்கரிய தியாகம் செய்து போராடியிருக்கிருர்கள்! ஆனல் எல்லாம் பதவி பித்து, மொழிவெறி என்று தூற்றுகிறது விடுதலை!

ஆந்திர மாகாணப் பிரிவினை என்ருல் ஆளும் கட்சி நடுநடுங்குகிறது. ஆந்திர மாகாணம் பிரிந்த பிறகு, ஹைதராபாத்தில் நிஜாமாட்சிக்கு முட்டுக்கொடுக்க முடியாது. ஹைதராபாத்பிரபுத்துவ அமைப்புக்கு சாவு மணியடிக்கும் நாள் நெருங்கிவிடும். அது நாடெங்கும் பிரபுத்துவ ஒழிப்புக்கும் மொழிவழி மாகாண அமைப்புக்கும் அடிகோலி, ஜனநாயக இயக்கத்தை வளப்படுத்துமென ஆட்சியாளர்கள் அஞ்சிச் சாகிருர்கள். கஜேந்திரனுக்கு நாராயணன் அபயம் அளித்ததைப் போல அவர்களுக்கு அபயம் அளிக்கிறது விடுதலை!

பண்டைக் காலத்தில் தென்னுட்டு மக்களின் முன்னோர்கள் பெரும்பாலும் திராவிடர்களாக இருந்த காரணத்தைக் காட்டி, இன்று திராவிடநாடு வேண்டுமென்று கோரும் விடுதலை, நவீன காலத்தில் சொந்தமான தாயகத்துடனும் மொழியுடனும் பொதுவான பொருளாதார வாழ்வுடனும் பண்பாட்டுடனும் சரித்திர பூர்வமாக வளர்ந்துள்ள நிலையான இனமான ஆந்திர மக்களோ, தமிழ் மக்களோ தத்தம் ராஜ்யத்தில் ஒன்றுபட்டு வாழ்வதற்குத் தடைபோடுகிறது! அந்தக் கோரிக்கையை அவதூறு செய்கிறது!

ஏகாதிபத்திய—பிரபுத்துவ ஆதிக்கத்துடன ஒத்துழைக்கும் டாட்டா-பிர்லா-டால்மியாக்கள், மொழிவழிமாகாணப் பிரிவினையை எதிர்க்கிருர்கள். பிற்பட்ட மாகாணங்களில் வேர் விடுகிருர்கள். மாகாண சர்க்கார்களைப் பஞ்சாயத்து போர்டுகளாக சிறுமைப் படுத்தி விட்டு, நாடெங்கும் செங்கோல் செலுத்த விரும்புகிருர்கள்!

தமிழ் நாட்டு பிற்போக்குப் பெரு முதலாளிகளும், டாட்டா—பிர்லாக்களைப் போல ஏகாதிபத்திய-பிரபுத்துவ ஆதிக்கத்துடன் ஒத்துழைப்பவர்களே. ஆனல் டாட்டா-பிர்லாக்களின தலையீட்டை அவர்கள் எதிர்க்கிருர்கள். தங்களுடையசந்தைக் கடை மார்வாடிக்கு போகக் கூடாதென்பது அவர்கள் கவலை!

இவர்களும் மொழிவாரி மாகாண கோரிக்கையை எதிர்க்கிருர்கள்; ஏனென்ருல் அந்தக் கோரிக்கை, நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு அபாயத்தை உண்டாக்குகிறது. அத்துடன், ஆந்திர மார்க்கட்டோ மலையாள மார்க்கெட்டோ தம் பிடியிலிருந்துபோகக் கூடாதென்று அவர்கள் கவலைப்படுகிருர்கள்.

மார்வாடிகளை எதிர்த்து தீக்குவார்கள்; ஆனல் ஆந்திர மாகாணப் பிரிவினை என்ருல், "ஐயோ" என்று அலறுவார்கள்! இவர்களுடைய இதயத் துடிப்பையே விடுதலை தெரிந்தோ தெரியாமலோ பிரதிபலிக்கிறது!

★

ஒரு இனத்துக்கு இலக்கணம் கூறும்பொழுது, மொழியை முக்கியப்படுத்துகிருர் ஸ்டாலின். பொதுமொழி இல்லாத இனமில்லை என்பதுசரித்திரத்தின் பாடம்!

ஒரே மொழி பேசுபவர்கள் இரு இனத்தவராய் இருக்கலாம். ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் ஒரே மொழியைப் பேசுகின்றனர். ஆனல் அவர்கள் வெவ்வேறு பிரதேசத்தில் தலைமுறை தலைமுறையாகக் கூடி வாழ்ந்து இரண்டு தனி இனங்களாகவே வளர்ந்திருக்கின்றனர்.

ஆனல் பல மொழி பேசுகிறவர்கள் ஒரே இனத்தவராய் இருக்கமுடியாது. ஸ்விட்ஜர்லாந்து ராஜ்யத்தில் நான்கு மொழிகள் அரசு மொழிகளாக இருக்கலாம்; ஆனல் அந்த நாட்டு மக்கள் ஒரே இனத்தவரல்ல வெவ்வேறு இனத்தவரின் சமஷ்டியே ஸ்விஸ் அரசு.

மொழிவாரி மாகாணம் என்பது தனிதேசக் கோரிக்கையல்ல. மொழிவழியாகப் பிரிந்து வாழ்க்கை நடத்தும் மக்கள் இஷ்டபூர்வமாக கூட்டுக் குடித்தனம் நடத்துவார்கள். அத்தகைய யூனியனுக்காகவே நாம் பாடுபடுகிறோம்.

ஆகவே ஸ்விட்ஸர்லாந்து உதாரணத்தைக் காட்டி மொழிவாரி மாகாணக் கோரிக்கையை எதிர்ப்பது, பொருத்தமற்ற வாதம்!

மொழிப்பற்றை மொழி வெறியாக வர்ணித்து, ஆந்திர மாகாணக் கோரிக்கையை எதிர்ப்பவர்கள், ஐக்கிய தமிழகக் கோரிக்கையையும் எதிர்ப்பார்கள்!

சுருங்கச் சொன்னல், இன்றைய மாகாண அமைப்புக்கு பாதுகாப்பாகிறது விடுதலையின் திராவிட நாட்டுகோஷம்!

—எஸ். ஆர். கே.

நியாயவிலைக் கடைகளில் உணவில்லை

திண்டுக்கல், அக். 17—

திண்டுக்கல் கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி எஸ். ஏ. தங்கராஜ் பின்வரும் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"வாரத்தில் 7 நாட்களுக்கும் நிரந்தரமாக உணவு வினியோகிக்கப்படுவதில்லை. இந்த வார ரேஷன் 15ந் தேதி இரவு பாதி பேருக்கு நான்கு நாள் ரேஷன் தான் இடைத்துள்ளது. மீதமுள்ள மக்கள் உணவுக்காக சாரை சாரையாக நியாய விலை கடைகளின் முன்பு அழுத கண்ணீரும், கம்பலையுமாக நிற்கின்றனர். 5 அவுன்ஸ் போட்ட (மைலோ) சோளம் 3 அவுன்சாக குறைத்துள்ளனர். இந்த வார ரேஷன் ஸ்டாக் இல்லையென்று கடைக்காரர்கள் கூறியதும் ஒரு படி அரிசியின் விலை 2 அணு உயர்ந்துள்ளது. (1-1-0 வாக இருந்தது. படி 1-3-0 வாக உயர்ந்துள்ளது)

திண்டுக்கல் போன்ற பஞ்ச பிரதேசத்தில் சர்க்காரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மிதமான கொள்கையை அனுஷ்டிப்பதை கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கின்றது. இந்நிலைமை நீடித்தால் பட்டினிச்சாவு அபாயம் ஏற்படும் என்பதை வற்புறுத்துகிறது. வார்டுகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உடனடியாக தலையிட்டு உணவு தான்யத்தை அனுப்பி வைக்க கோருகின்றது.

குறிப்பு: இது சம்பந்தமாக திண்டுக்கல் தோல்பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் சார்பிலும் 15, 16 வது வார்டு பொதுமக்கள் சார்பிலும், திண்டுக்கல் வடபகுதி மக்கள் ஜனநாயக முன்னணி சார்பிலும் முனிசிபல், சுருட்டு யூனியன்களின் சார்பிலும், ஜில்லா கலெக்டருக்கு 15-10-52 தேதி தந்திகள் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் இதன் மூலம் அறிவிக்கின்றேன். தவறிப்போன ரேஷன் கார்டுகளுக்கு நிவாரணக் கடையிலே உணவு கிடைக்காது கஷ்டப்படும் மக்களுக்கு உடனே கார்டுகள் வழங்கும்படி இதன்மூலம் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணு-பெண்ணுறு திட்டத்தை கைவிடுக!

ஆந்திர கிசான் சபா மகஜர்

புதுடில்லி, அக். 17—

கிருஷ்ணு - பெண்ணுறு அணைக்கட்டு திட்டங்களை கைவிட்டுவிட்டு, ராயலசீமா பஞ்சப்பிரதேசங்களுக்கு உணவளிக்கக்கூடிய சித்தேஸ்வரம் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென கோரி ஆந்திர கிசான் சபா மத்திய சர்க்கார் திட்ட மந்திரி குல்ஸாரிலால் நந்தாவிடம் ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளது.

சென்ற புதன்கிழமையன்று ஆந்திர கிசான்சபாவின் பிரதிநிதிகள் மூவர் நந்தாவை பேட்டி கண்டபோது இந்த மகஜர் கொடுக்கப்பட்டது. சித்தேஸ்வரம் திட்டம் ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென்று இம் மகஜர் வலியுறுத்துகிறது.

மேலும் கொண்டிகோடா நந்திகோடா திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டுமென்றும் கர்னூல்-குடப்பா காலவாய் திருத்தியமைக்கப்பட வேண்டுமெனறும், மத்திய சர்க்காரால் இருட்டடிப்புசெய்து வைக்கப்பட்டிருக்கும் கோசலா கமிட்டி ரிப்போர்ட்டை உடனடியாக வெளியிட வேண்டுமென்றும் கிசான்சபாவின் மகஜர் கோருகிறது.

நகர சுத்தி தொழிலாளர் சங்க நிறுவனம்

சிதம்பரம், அக். 15—

இங்கு 11-10-52ல் தோழர் பி. எஸ். மணி அய்யர், பி.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நகரசுத்தி தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. சங்கத்திற்கு தோழர் பி எஸ் மணி அய்யர் தலைவராகவும், தோழர் டி ஆர். விஸ்வநாதன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

வருமான வரியிலிருந்து ரூ. 2½ கோடி சென்னைக்கு பங்குகிடைக்கலாம்

சென்னை, அக். 18—

அரசியல் சட்டத்தின்படி ராஜ்ய சர்க்கார்களின பொறுப்புகளை நிறைவேற்ற ராஜ்யங்களின் இன்றுள்ள நிதி வருவாயை அதிகரிக்க வேண்டுமென்று ராஜ்ய சர்க்கார்களின் வேண்டுகோளுக்கு மத்திய சர்க்காரின் நிதிக கமிஷன் சம்மதம் தெரிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜ்ய சர்க்கார்களுக்கும் மத்திய சர்க்கார்களுக்குமிடையே நிதி வருவாயின சாதனங்களை ஒதுக்குவது பற்றி நிதிக் கமிஷன் சீக்கிரமே தனது தீர்ப்பை அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது,

நிதிக்கமிஷனின் தீர்ப்பின் அம்சங்கள் என்னவென்று தெரியாவிட்டாலும், இன்று வசூலிக்கப்படும் வருமான வரியிலிருந்து சென்னை சர்க்காருக்கு ரூ. 2½ கோடி கிடைக்கலாமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

ஒரு ராஜ்யத்தின் ஜனத்தொகையை அடிப்படையாக் கொண்டுதான் இந்த நிதி பிரிக்கப்பட வேண்டுமென்று சென்னை சர்க்கார் கோரியது. இந்த விதியை நிதிக் கமிஷன் ஏற்றுக் கொண்டதா இல்லையா என்பது தெரியவில்லை.

இன்று வருமான வரியிலிருந்து சென்னை சர்க்காருக்குக் கிடைக்கும் பங்கு 17½ சதவிகிதம் மத்திய சர்க்காரின் வருமானத்தைப் பங்கிடுவதைப் பற்றி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அனுப்பியுள்ள மகஜரை பிரசுரிக்க சென்னை சர்க்கார் அனுமதி கோரியதற்கு; நிதிக்கமிஷன் இன்னும் பதிலளிக்கவில்லை.

அமெரிக்காவில் அணுசக்தி விஞ்ஞானி தற்கொலை!

நியூப்ரன்ஸ்விக், அக். 17—

யுத்த காலத்தில் அணுசக்தி ஆராய்ச்சி செய்து, பிரிட்டனுல் கௌரவிக்கப்பட்ட டாக்டர் லேன், என்னும் இளம் அணுசக்தி விஞ்ஞானி அமெரிக்காவில் ரட்கர்ஸ் சர்வகலாசாலை முகாமில், ஒருவித ரசாயன திரவத்தைக் குடித்து தற்கொலை செய்து கொண்டு மாண்டார். இரு கல்லூரி ஊழியர்கள், அவரை தற்கொலை செய்து கொள்ளுவதினின்றும் தடுத்து நிறுத்த செய்த முயற்சிகளெல்லாம் பலனளிக்கவில்லை.

அவர் ஏன் தற்கொலை செய்துகொண்டாரென்று தெரியவில்லையாம்.

ஒரு வேளை, தன்னுடைய அணுசக்தி ஆராய்ச்சியின் பயனுக, அணுகுண்டுகள் செய்யப்பட்டு; ஆயிரக்கணக்கான மக்கள் சாகும் நிலை ஏற்பட்டதேஎன்றுமனமுடைந்து அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம்.

நெல்லை சதிவழக்குத் தோழர்களை விடுதலை செய்!

விவசாயிகள் கோரிக்கை

காக்கயநல்லூர், அக். 16—

12-10-52ல் இரவு 8 மணிக்கு காக்கயநல்லூர் கிராமத்தில் தோழர் பட்டன் தலைமையில் விவசாயிகள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் காளியப்பன் விவசாயிகளின் குறைகளும் இதை போக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிப் பேசினுர்.

அம்பை, கடயம் பிர்க்கா விவசாயிகள் சங்க ஆர்கனைசர் தோழர் எம். கே. சாமி விவசாயிகளின்மீது ஜனவிரோத காங்கிரஸ் சர்க்கார் விதிக்கும் வரிக்கொடுமைகளைப்பற்றியும் இவ்வூருக்கு ஆழ்பூரிலிருந்து ரோடு போடவும், வாய்க்காலைக் கடக்க பாலம் போடவும், குடி தண்ணீர் கிணறு வெட்டவும், வேறு பல குறைகள் தீரவும் விவசாய சங்கத்தின் அவசியம் பற்றியும் தஞ்சை ஜில்லாவிற்கு விவசாயிகளுக்கு அவசரச் சட்டம் கொண்டு வந்ததைப்போல் நெல்லை, ராமநாதபுரம் ஜில்லாவிற்கு கொண்டுவர வேண்டுமென்றும் பேசினர்.

பின்னர் நெல்லைச் சதிவழக்கில் தண்டிக்கப்பட்டிருக்குந் தோழர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும், தோழர் மலையரசுக்கு விதித்திருக்கும் தண்டனையை ரத்துச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

லேபர் ஆபீஸரின் தலையிடாப் போக்கு ஏன்?

சுருட்டு, தோல் பதனிடும் தொழில்களில் நெருக்கடி

திண்டுக்கல், அக். 17—

திண்டுக்கல் நகரத்திலுள்ள பிரதான தொழில்களில் தோல் பதனிடும் தொழிலிலும், சுருட்டுத் தொழிலிலும் பெருவாரியான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மேற்படி தொழில்கள் சம்பந்தமாக சர்க்கார் அனுஷ்டிக்கும் ஜனவிரோத கொள்கையால் மேற்கண்ட தொழில்கள் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளன. அந் நெருக்கடியால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலையின்றி நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுள்ளன. இந் நெருக்கடியை தவிர்க்க முதலாளிகளும் தொழிற் சங்கத்தோடு இணைந்து வேலை செய்யாது தங்களின் லாபத்தை பாதுகாக்க தொழிலாளர்களை தினக்கூலிகளாக வைத்து கசக்கி பிழிந்து பஞ்சப்படி, போனஸ், லீவ் வசதி இல்லாது வேலை வாங்குகின்றனர். தினசரி டிஸ்மிஸ், சஸ்பென்ட் பழிவாங்கும் படலம் தண்ணீர்பட்டபாடாகிவிட்டது. இதனுல் தொழிலாளர்களின் ஆத்திரத்தையும் அதிருப்தியையும் உண்டுபண்ணியுள்ளது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட லேபர் அதிகாரிகளுக்கு தினசரி தபால், மகஜர்கள், தொழிற்சங்கம் எழுதியும் தலையிடாக் கொள்கையை அனுஷ்டிக்கின்றனர். இந்நிலை நீடித்தால் தொழில்களில் அமைதிகாண முடியாது. தொழிலாளர்கள் தங்கள் நலனைப்பாதுகாக்க நடவடிக்கையிலிறங்கினுல் அதற்கு அதிகாரிகள்தான பொறுப்பாளர். (ந-நி)

37 மோட்டார் தொழிலாளர்கள் வேலை நீக்கம்

எம்.சி.எஸ். நிர்வாகத்தின் அக்கிரமம்!

மேட்டுப்பாளையம், அக் 18—

மேட்டுப்பாளையம் நீல கிரி மோட்டார் தொழிற்சங்கத்தை உடைக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் சங்கத்தின முக்யஸ்தர்களான 17 டிரைவர்களையும், 9 க்ளீனர்களையும், 11 தொழிற்சாலை தொழிலாளிகளையும் 16-10-52ல் வேலையைவிட்டு நீக்கப்போவதாக எம். சி. எஸ். பஸ் நிர்வாகம் நோட்டீஸ் கொடுத்துள்ளது.

கீழ்பவானியிலுள்ள லாரி பகுதியில் கடந்த 2 மாத காலமாக வேலையின்றி சம்பளம் கொடுத்து வருவதாகவும், மேட்டுப்பாளையத்தில் லாரிகளுக்கு வேலையில்லை என்ற பொய்க் காரணம் காட்டி இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

எவ்வித காரணமுமின்றி 37 பேர்கள் அநியாயமாக நீக்கப்பட்டதால், தொழிலாளிகள் மிகுந்த ஆத்திரமடைந்துள்ளனர். சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகளும், சேராதவர்களும் எம். சி. எஸ். நிர்வாகத்தை எதிர்த்துப் போராடத் தயாராகி வருகிருர்கள்.

எம். சி. எஸ். நிர்வாகத்திலுள்ள பஸ், லாரிகளை கவனித்தால், இன்னும் அதிகப்படியான தொழிலாளிகள் தேவை.

வெற்றிபெற்ற ந. சீ. க அபேட்சகர்களுக்கு பாராட்டு

காஞ்சீபுரம், அக். 16—

13-10-52 திங்கள் மாலை 6 மணிக்கு 'திராவிடநாடு' நிலையத்தில் காஞ்சி நகரசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற நகர சீர்திருத்தக் கழகத் தோழர்களைப் பாராட்டி ஒரு தேநீர் விருந்து திரு. அண்ணுதுரையால் நடத்தப்பட்டது.

அதுசமயம் ந.சீ.க. சார்பில் வெற்றிபெற்ற அபேட்சகர்களாகிய எ, பாலகிருஷ்ண முதலியார், டாக்டர் அமிர்தசாமி, எம். பொன்னுசாமி முதலியார், ஏ. கே. ஆள்வார், சே. கோ. பெருமாள், சி. வி. எம். அண்ணுமலை, ஏ. எல். செல்வராஜ், சி. வி. ராஜகோபால், ஏ. கதிர்வேலு, வி. மோகன், அப்துல்ரகிமான் சாயபு, சுயேச்சையாக நின்று வெற்றிபெற்ற தோழர் டி. ராஜகு அவர்களும், மற்றும் நகரத்திலுள்ள முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர்.

தேநீர் விருந்துக்கு பிறகு தேர்தலில் வெற்றிபெற்ற 12 பேரும் ந. சீ. க. ஒன்றுபட்டு போராட ஒரு குழுவை 20-ம் தேதி அமைப்பதென முடிவு செய்தனர். (ந. நி.)

மேக்னிசைட் தொழிலாளர் கோரிக்கைகள்

சேலம், அக். 14—

13-10-52ல் சேலம் மேக்னிசைட் தொழிலாளர்களுடைய குறைகளைப் பற்றி மதுரை கன்சிலேஷன் ஆபீசர் திரு. வெங்கடேசன் அவர்கள் முன்னிலையில் காரியதரிசி கே. பாலன், தலைவர் எஸ். எம். ராமய்யா அவர்களும் கீழ்க்கண்ட கோரிக்கைகளை எடுத்துக்கூறி உடனடியாக அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர்:

1. அடிப்படை சம்பளத்தை மாற்றி அமைக்கவேண்டும்.

2. 1946-ம் வருஷத்திய வேலைமுறையை 28-6-52ல் நடந்த பேச்சுவார்த்தைகளில் நிர்வாகம் நடத்துவதாக எழுத்துமூலம் வாக்குறுதி கொடுத்தும் அதை நிறைவேற்ருமல் இருப்பதை அத்தாட்சிகளுடன சமர்ப்பிக்கப்பட்டது.

3. எல்லா வேலைகளிலும் எல்லா தொழிலாளர்களையும் ஈடுபடுத்த வேணடும்; எப்பொழுதும் ஒரே வேலையில் வைக்கககூடாது.

4. ஒரு மேஸ்திரிக்கு பல குட்டி மேஸ்திரிகள் இருந்துகொண்டு தான்தோன்றித்தனமாய் நடந்து கொள்வது நிறுத்தப்படவேண்டும். சங்கப் பிரதிநிதி வேண்டும் போது நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த நிர்வாகம் முன்வர வேண்டும். சங்கம் எழுதும் கடிதங்களுக்கு நிர்வாகம் பதில் தரவேண்டும்.

இதுபோன்ற முக்கிய குறைகளைக் கொண்ட மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. பிறகு நிர்வாகத்துடன் கன்சிலேஷன் ஆபீஸர் பேசிய பேச்சுவார்த்தையில் நிர்வாகம் எல்லா குறைகளையும் கவனித்து திருப்திகரமாக செய்வதாகவும், அடிப்படை சம்பளத்தை மாற்றியமைக்க சர்க்கார் கிர்ணயம் செய்த சம்பளத்தை கொடுக்க முயற்சி செய்வதாகவும் ஒப்புக்கொண்டார். நிர்வாகத்திற்கு எல்லா கோரிக்கைகளும் ஒரு மாதத்திற்குள் பதில் தருவதாகவும் ஏற்றுக்கொண்டார். (ந-நி)

கொரியாதினக் கூட்டங்கள்

மேட்டுப்பாளையம், அக். 16—

15-10-52 அன்று மாலை 6-30 மணிக்கு காந்தி மைதானத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின சார்பாக "கொரியா தினம்" சம்பந்தமாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைமை வகித்த ரயில்வே தொழிற்சங்க உபகாரியதரிசி வில்லியம் கொரியா தினத்தை பற்றிப் பேசினுர். பினனர் தோழர்கள் பால குருசாமி, கோவை நடராஜன், வெள்ளியங்கிரி, பாஸ்கரன் ஆகியோர் கொரிய மக்கள்படும் அல்லல்கள், ஆதிக்க வெறிபிடித்த அமெரிகக ஏகாதிபத்யத்தின் அடாத செய்கைகள் அதற்கு பக்கபலமாக நிற்கும் நேரு சர்க்காரின் ஜனநாயக விரோதப் போக்கு முதலியவற்றை விளக்கிப் பேசி சமாதானத்தின அவசியத்தை வலியுறுத்தினர்.

செப்டம்பர் 12, 13, 14 தேதிகளில் ஜலந்தரில் நடைபெற்ற 3-வது அகில இந்திய சமாதான காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள முக்கியமான இரு தீர்மானங்களாவன: (1) அமெரிக்க சர்க்காருக்கு இந்திய மக்கள் வேண்டுகோள். (2) கொரிய சமாதானப் பிரகடனம் என்ற இரண்டும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (ந—நி)

★

வீரபாண்டி

அக். 16—

இன்றுமாலை 6-மணிக்கு இவ்வூர் விவசாய சங்கத்தின சார்பில் கொரிய தினத்தையொட்டி ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு திருச்சி சதிவழக்கில் தண்டனை பெற்று சமீபத்தில் விடுதலையாகி வந்த தோழர் வெள்ளையன் தலைமை வகித்தார். அவருக்குப் புதிதாக விழுப்புரம் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் வாசுதேவனுக்கும் வரவேற்பளிக்கப்பட்டது.

கூட்டத்தில் பேசிய தோழர்கள் வி. எம். ஜெயராமன, வெள்ளையன், வாசுதேவன கொரியதின முக்கியத்துவத்தைப் பற்றியும், உழைப்பாளி கட்சி பற்றியும், நாட்டு நிலை பற்றியும் விரிவாகப் பேசினர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் [illegible] நிறைவேற்றப்பட்டன.

(1) கொரிய சமாதானத்தை [illegible] 5 வல்லரசு மகாநாட்டைக் கூட்டுவதற்கு நேரு சர்க்கார் முன்முயற்சியெடுக்க வேண்டும்.

(2) கொரியாவிற்கு அனுப்பிய [illegible] படைகளை உடனே வாபஸ் [illegible] வேண்டும்.

(3) [illegible] பாதிக்கப்பட்ட பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும். உடனே கஞ்சித் தொட்டிகள் திறக்க வேண்டும், [illegible] ஏரி மராமத்து, ரோடு வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். 1362 பசலிக்கு நிலவரி பூராவும் [illegible]

[illegible]

(5) உழைப்பாளர் கட்சி ஜனவிரோத காங்கிரஸ் சர்க்[illegible]

★

அரூர்

அரூர், அக். 18—

அக். 15ல் அரூர் ரேடியோ மைதானத்தில் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் எம். அண்ணுமலை தலைமை வகித்தார். மேக்னிசைட் தொழிற்சங்க காரியதரிசி: தோழர் பாலன், தோழர் ஏ. முனுசாமி கொரிய யுத்தம பற்றியும், நாட்டிலுள்ள பஞ்சநிலைமை பற்றியும் பேசினர்.

1. கொரிய யுத்தத்தை நிறுத்த நேருவுக்கும், ட்ரூமனுக்கும் தீர்மானங்களின் மூலம் தெரிவித்தல்.

2. அரசியல் கைதிகளை விடுதலை செய்தல்.

3. அரூர் தாலூகாவைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி நிவாரண வேலைகளை அளித்தல்.

4. நிவாரணக் கடைகளை அதிகமாகத் திறந்து அதிகமான உணவு தானியங்களைப் போதியளவுக்கு விநியோகித்தல்.

5. அரூர் பிர்க்காவிலுள்ள பெரிஏரி, நர்சனேரி முதலிய ஏரிகளுக்கு வாணிஆறு, வாட்டி ஆறு மூலம் தண்ணீர் பாய்ச்சி சாகுபடியை அதிகரித்தல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றபபட்டன.

காருக்கு எத்தகைய ஒத்துழைப்பும், தருவதற்கு இடமே கிடையாதென்றும், துரோகி மாணிக்கவேலர் பாதையைப் பற்றி கனவிலும் கருதாமல் மேலும் ஐ. ஐ. முவை பலப்படுத்த வேண்டுமென்றும், இத் தொகுதியில் (திருக்கோயிலூர்) இக் கட்சியின வெற்றிக்கு உத்திரவாதிமளித்த முற்போக்கு கட்சிகள், பாமர மக்கள் இவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும், தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளினபடி ஐ. ஐ. முவின குறைந்தபட்ச திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றது.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்ற சங்க திறப்புவிழா

கரூர், அக். 17—

கரூர் சிதம்பரம் தெருவில் "தாழ்த்தப்பட்டோர் முன்னேற்ற சங்க" திறப்பு விழா, நகரசபை அங்கத்தினர் (சுயேச்சை) திரு. முருகன் தலைமையில் நடைபெற்றது. மனேகரன், வி. எஸ். மருதமுத்து, தங்கவேலு, பி. எஸ். சாம்பசிவம் ஆகிய தோழர்கள் சங்கத்தின் அவசியம் பற்றிப் பேசியபின், சங்கத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: ஜி. அந்தோணி முத்து, உபதலைவர்: எம். ராஜு, காரியதரிசி: கே. டி. மனேகரன், உதவிக் காரியதரிசி: பி. கருமலை, பொக்கிஷதார்: எம். ஏசுதாஸ். (ந. நி.)

ஜீவாவின் சுற்றுப்பிரயாண வசூல்

திருநெல்வேலி-பாளையங் கோட்டை வசூல் விபரம்

	ரூபாய்		
சைய்யது பீடிபாக்டரி	101		
நீ. அருணுசலம் பிள்ளை	100		
ஒரு அனுதாபி	50		
,,	25		
ராமசாமி முதலியார்	10		
நெல்லையப்ப பிள்ளை	10		
மாரார் ஸ்டுடியோ	5		
துரைசாமி (பேட்டை)	50		
பாளையங் கோட்டை வசூல்	39	3	6
திருநெல்வேலி டவுன் வார்டு வசூல்	313	12	1
14வது வார்டு வசூல்	22	0	0
	725	15	7

செலவு ரூ. 104-4-6 போக ரூ. 621-11-0 "ஜனசக்தி" நிதிக்கு அனுப்பப்பட்டது.

★

வடசேரி ராஜன் வீவிங் பாக்டரி தொழிலாளர்	30	0
வடசேரி ஜனசக்தி வாசகர்	6	1
நாங்குனேரி முற்போக்கு வாலிபர் சங்கம்	40	0
உவரி. நீ. துரை பாண்டியன், மூலக்கரை. நீ. சந்திர சேகரன் மூலம் வசூல்	26	0
பாளையங்கோட்டை பஸ் தொழிலாளர்கள் தோழர் ஜீவா கூட்டத்தில் கொடுத்தது	4	0
ஜங்ஷன ராமையா	5	0
,, அனுதாபி	5	0
,, ,,	2	0
	108	1

செலவு ரூ. 47 போக மீதி ரூ. 61-1-0 ஜனசக்தி நிதிக்கு அனுப்பபபட்டது.

திருவிதாங்கூர் தமிழகப் புத்தேரியில் தோழர் சி. பி. இளங்கோ மூலம் வசூல்.

அம்பலவாண பிள்ளை ரூ. 5, குமரேச பிள்ளை ரூ. 2, எஸ். எம். பெருமாள் ரூ. 2.

ரூ. 1 நன்கொடையாளர்கள் கே. குமாரசுவாமி பிள்ளை, எம். பி. பரமேசுரன் பிள்ளை, எல், சொர்ணு தேவி, கெ. சொக்கலிங்கம பிள்ளை, நாகப்பன் செட்டியார், தாணுமாலயப்பெருமாள்பிள்ளை, டி. ஆறுமுகம் பிள்ளை, எஸ். ஆறுமுகம் பிள்ளை, டி. சாந்தாபாய், ஏ. வேலாயுதம் பிள்ளை, முருகன பட்டம்கெட்டி, எஸ். முத்துவேலு பிள்ளை, எம். சொக்கலிங்கம் பிள்ளை, இ. நல்ல கண்ணு தேவர், இ. நல்ல சிவன பிள்ளை, பி. நலலபெருமாள் பிள்ளை, என். வேலாயுதம் பிள்ளை.

ஏழு பேர்கள் எட்டணு வீதம ரூ. 3-8-0.

ஆக மொத்தம் 29-8-0, செலவு போக ரூ. 27-6-0 ஜனசக்தி நிதிக்கு அனுப்பபபட்டது.

★

நாசரேத் நன்கொடையாளர் விபரம்

ஆர். வரதாராஜன் ரூ. 5, பிரான்சிஸ் ஜோசப் ரூ. 2, கே. செல்லையா ரூ. 2, ஒரு அனுதாபி ரூ. 1½, வி. ஆர். அய்யாத்துரை ரூ. 1½, பி. துரைராஜ ரூ. 1-4-0.

ரூ. 1 நன்கொடையாளர் ஐ. சுந்தராஜ், மணி, ஏ. எட்வர்ட், மோஸஸ் நாடார், எஸ். வெள்ளைச்சாமி. எம். மகாலிங்கம், கே. எஸ். டி காசி நாடார்.

8 அணு நன்கொடையாளர் வெங்கிடேசன், டி. செல்லப்பன், என. செல்லப்பன்.

4 அணு நன்கொடையாளர் யோ. பரமேரி, து. ரத்தின குருசாமி, ஆர். துரைராஜ. ஜே. ஜான் நாடார், ஈ. ரத்தின ராஜ், ஒரு அனுதாபி, ஆர். பாலராஜ், டி. ஞானதுரை, பி. விஜயசிங, முருகன, ஜி. சுரேந்திரன், வி. வேதபோதகம், துரைசாமித் தேவர்.

★

ஆமதாபாத் நன்கொடையாளர் விபரம்

முற்போக்கு வாலிபர் சங்கம் ரூ. 8.

ரூ. 1-8-0 நன்கொடையாளர் ஜனசக்தி ஏஜெண்ட், கே. ரத்தினம், ஜனசக்தி நிருபர் எஸ். சந்திரன, வி. விநாயகம, எம். சித்தானந்தம். வி. வெங்கடேசன், எஸ். ஜெயராம், எ. கே. கிருஷ்ணன், எஸ். ராமலிங்கம், எஸ். கோபால், வி. ராஜமாணிக்கம், ஆர். முனுசாமி, எம். ஆறுமுகம், எ. துரைக்கண்ணு, எஸ். வேதாசல பிள்ளை, வி. டி. பழனிசாமி, வி. டி. சுசீலா, எ. வி. கந்தசாமி, டி. ராஜகோபால், எல். சஞ்சீவி, சி. ஆறுமுகம், என். தியாகராஜ பிள்ளை, எஸ். கனேஷ், கே. எஸ். குப்புசாமி, வி. தக்ஷணமூர்த்தி, பி. விநாயகம், எஸ்.எ. குப்புசாமி, எஸ். வரதபிள்ளை, வி. சிங்காரவேலு, டி. ஷண்முகம், டி. கந்தசாமி, ஆர். செங்கேணி, ஏ. கோவிந்தசாமி, பி. ஜானகிராம், என். பழனிசாமி, பி. எஸ். குப்புசாமி, எம். ஷணமுகம், டி. முனுசாமி, எ. குப்புசாமி.

குறிப்பு:—மணியார்டர் கழிவு, தபால் சிலவுபோக ரூ. 64-0-0 13-10-52ல் மணியார்டர் செய்யப்பட்டது.

விவசாயத் தொழிலாளர் வெற்றி

நாகப்பட்டணம், அக். 16—

திருமப்பத்து (குன்னியூர் ரேஞ்சு) பண்ணையாட்கள் வேலை நிறுத்தம் 9-10-52லிருந்து 4 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றதன் விளைவாகக் குறுவை அறுவடை வரை ஆளுக்கு ரூ. 1ம், நடவாளுக்கு 12 அணு விதமும், களவடி சாட்டுவா ஒரு வேலிக்கு உண்டு என்றும் பச்சைமுத்து நாடார் தலைமையில சகலமிராசுதார்களும் ஒத்துக்கொண்டபின, ஸ்டிரைக் வெற்றிகரமாக முடிந்தது. நாகை தாலூகா விவசாயிகள் சங்க தலைமையில்பண்ணையாட்கள் போராடி வெற்றிபெற்றனர். ராஜாஜி காங்கிரஸ் சர்க்கார் சமரச அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தும், போராட்டமே விரைவில பலனை அளிக்கிறதென்பதற்கு இச்சம்பவமே உதாரணமாகும். (ந. நி.)

மதுரை ரயில்வே லோகோ-ஷெட்டில் விபத்து!

தொழிலாளிக்கு கால் முறிவு நிர்வாகத்தின் அலட்சியம்

மதுரை அக், 16—

மதுரை ரெயில்வே லோகோ ஷெட்டில் எஞ்சின்களுக்கு நிலக்கரி நிரப்புவதற்காக "ஸ்டீம் க்ரேன்" உபயோகிக்கப்பட்டு வருகிறது. கரியை சுமக்கும் இரும்புக் கூடை ½ டன எடையுள்ளது. கரியையும் சேர்த்தால் சுமார் ஒரு டன்களுக்கு அதிகம்இருக்கும்.

7-10-52ம் தேதி இரவு சுமார் 8-15 மணிக்கு நிலக்கரியை எஞ்சினுக்கு ஏற்றிக்கொண்டு போகும்போது எதிர்பாராத விதமாய் கரி நிரப்பிய இரும்புக்கூடை திடீரென்று கீழே இறங்கியதின காரணமாய் அங்கே வேலை பார்த்த முத்தையா அம்பலம் என்ற 'கோல் கலாசி'யின் மேல் விழுந்து இடது கால் முறிந்தும், பலத்த அடிபட்டும் மிகவும் கவலைக்கிடமான நிலைமையில் தற்போது மதுரை சர்க்கார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிருர்.

ரெயில்வே நிர்வாகம் பல தில்லுமுல்லுகள்செய்து ரயில்வே தொழிலாளியின் அஜாக்கிரதை என்று கூறி தட்டிக்கழிக்கப் பார்க்கிறது. இந்த விபத்திற்கு முக்கிய காரணம் இரவில் கிரேன் வேலை செய்யும்போது கிரேனில் விளக்குவெளிச்சம் கிடையாது. மேலும் ஒரு கூடை கரியை கொட்டி வருவதற்குள் அடுத்த காலி கூடையில் கரி நிறபபவேண்டும். போதிய வேலை ஆட்கள் இல்லாததால் குறைந்த நேரத்தில் அதிகமாய் வேலை வாங்குவதால் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விபத்தைப் பற்றி ரெயில்வே நிர்வாகமும், சர்க்காரும் தகுந்த நடவடிக்கை எடுத்து தொழிலாளிக்குநியாயம் வழங்கவேண்டும் என்று ரயில்வே லேபர் யூனியன காரியதரிசி தோழர் சினிவாசன கேட்டுக் கொள்கிருர்.

இந்திய ஸ்தானிகர் பதவி யேற்ருர்

மாஸ்கோ, அக். 18—

சோவியத்யூனியனுக்கு இந்திய ஸ்தானிகராக நியமனம் செய்யப்பட்டுள்ள கே. பி. எஸ். மேனன் இன்று சோவியத் ஜனாதிபதி ஷ்வெர்னிக்கிடம் தனது சன்னதுகளை சமர்ப்பித்தார். [illegible]

பொது நலஉரிமை சங்கம்

கோவை, அக். 16—

அக்டோபர் மாதம் 11-ந் தேதி இரவு 9 மணிக்கு தேவாங்கபேட்டை 3 நெம்பர் ரோட்டில் கெ. 9/61 கட்டடத்தில் கூடிய கூட்டத்தில் "பொதுநல உரிமை சங்கம்" கோவை என்ற சங்கத்தில் வி. கே. நாகராஜ தலைவராகவும் எஸ். பாலசுப்ரமணியம் உபதலைவராகவும் ஆர். என். ரங்கசாமி காரியதரிசியாகவும் ரங்கராஜ உப-காரியதரிசியாகவும் தங்கவேல் பொக்கிஷதாரராகவும் 10 பேரை கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிறகு சட்டதிட்டங்கள் பரிசிலனை செய்யப்பட்டு தலைவர் பேசிய பின கூட்டம் கலைந்தது.

தூத்துக்குடி செய்திகள்

இந்தவார அரிசிவிலை

தூத்துக்குடி, அக் 17—

முதல்ரக பச்சரிசி படி	ரூ 1-7-0
2 வது ரகம்	ரூ 1-4-0
புழுங்கல் அரிசி முதல் ரகம் படி ஒன்றுக்கு	ரூ 1-4-0
2 வது ரகம்	ரூ 1-2-6

நியாயவிலைக் கடைகளில் தற்பொழுது கொடுக்கப்படும் அரிசி மிகவும் மோசமாக துற்நாற்றம் வீசக்கூடியதாக இருப்பதாகத் தெரிகிறது.

"தீபாவளிக்கு ஜவுளி விற்பனை மோசம்"

தூத்துக்குடியில் இந்தவருடம் ஜவுளிக் கடைகளில் பலவித ஜவுளி ரகங்கள் ஸ்டாக் இருந்தும் சென்ற வருடத்தை விட இப்பொழுது விற்பனை மிகவும் மோசமாகயிருப்பதாக நகர் பிரபல ஜவுளி வியாபாரி ஒருவர் கூறினர்.

"இந்நாட்டு மன்னர்"களுக்கு எச்சில் இலையும் இல்லை!

நகரில் எப்பொழுதையும் விட தற்பொழுது அதிகமாக குறைந்[illegible] மூன்று அல்லது நான்[illegible] "இந்நாட்டு மன்னர்கள்" [illegible]தாட்டியில் விழும் எச்சில் இலைகளுக்காக ஒவ்வொரு[illegible] கிளப்பின் முன் [illegible] [illegible]

இலைகளை எடுக்க முடியாதபடி போட்டு மறைத்திருக்கிருர்கள்.

தூத்துக்குடியில் லெனின்

இங்கிலீல் கடந்த மூன்று தினங்களாக "லெனின் வாழ்க்கை சரித்திரம்" என்ற படம் திரையிடப்படுகிறது. ஏராளமான மாணவர்களும், தொழிலாளர்களும் பொதுமக்களும் இதைக்கண்டு களிக்கின்றனர், தோழர் லெனின், ஸ்டாலின் தோன்றும் இடங்களிலெல்லாம் மக்கள் குதூகலத்துடன் ஆரவாரம் செய்கின்றனர். இத்துடன் என். எஸ், கே. யின் ரஷ்ய விஜயமும் காட்டப்படுகிறது. தூத்துக்குடியில் லெனினைப பற்றிய படம் காட்டப்படுவது இதுவே முதல் தடவை. (ந-நி.)

சீனவுடன் வியாபாரம் செய்ய போட்டாபோட்டி

லண்டன், அக் 18—

சீனவுடன் வர்த்தகம் செய்வதற்கென்று பல பிரிட்டிஷ் வியாபாரிகளால் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேசிய வியாபார சங்க லிமிடெட் கம்பெனிக்கு இதுவரை இதுவரை 1 கோடி 40 லட்சம் பவுன் பெருமான முள்ள வியாபாரச் சரக்கு வாங்க ஆர்டர்கள் வந்திருக்கிறது.

மக்கள் மன்றம்

4-வது வட்டம் ஹெல்த் ஆபீசர் தில்லுமுல்லு

4-வது வட்டம் ஹெல்த் ஆபீசர் தில்லுமுல்லுகளை [illegible]

[illegible]

கின்றது. இரவில் தூங்க முடியவில்லை. இதை உடனடியாக அதிகாரிகள் கவனித்து ஆவன செய்து அனுமதியை ரத்துசெய்ய வேண்டுமென்று கோருகிறோம்.

வடசென்னை, 13-10-52. } கே. ஜி. [illegible]

ஓட்டுப் பதிவு செய்வதில் அலட்சியமேன்?

[illegible]

15-10-52 மதுரை } எஸ். ராமகிருஷ்ணன்.

இந்திய சீன மக்கள் ஒன்றுபட்டால் ஆசிய சமாதானம் நிச்சயம்

பீகிங்கில் இலக்கிய, விஞ்ஞான பிரதிநிதிகளின் வரவேற்பு

லண்டன், அக். 18—

சீன-இந்திய நட்புறவுக் கழகத்தார் இந்திய சமாதான தூதுகோஷ்டிக்கு நேற்று அளித்த விருந்தில், இந்திய சமாதான தூதுகோஷ்டித் தலைவர் டாக்டர் கிச்சுலு பேசும்பொழுது, இந்தியாவின் 35 கோடி மக்களும், சீனாவின் 47½ கோடி மக்களும் ஒன்றுபட்டு நிற்பார்களேயானால், ஆசியாவில் சமாதானத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமல்ல, உலக சமாதானத்திற்கும் பெருத்த அளவு உதவ முடியும் என்று கூறியதாக புதிய சீன செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

தூதுகோஷ்டி உப-தலைவர் டாக்டர் கியானசந்து பேசும்பொழுது, சீன-இந்திய நட்புறவு பலப்படுவது, சமாதான இயக்கத்திற்கு ஆக்கம் அளிப்பதாகும் என்று கூறினர்.

ஆசிய மகாநாட்டு உதவி பொதுக் காரியதரிசி திரு. ரமேஷசந்தும், பல இந்தியப் பிரதிநிதிகளும் பீகிங்கிலுள்ள இலக்கிய, விஞ்ஞான அரங்கப் பிரதிநிதிகள் அளித்த விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

சீனாவுடன் வர்த்தகம் செய்ய 1100 பிரிட்டிஷ் கம்பெனிகள் விண்ணப்பம்

லண்டன். அக். 17—

கடந்த 4 வாரங்களில், 1100 பிரிட்டிஷ் கம்பெனிகள் சீனாவுடன் வர்த்தகம் செய்ய விண்ணப்பித்து உள்ளனர் என்று லண்டன் ஏற்றுமதி கார்ப்பரேஷன் இன்று அறிவித்துள்ளது. பீகிங்கிலுள்ள சீனதேசிய ஏற்றுமதி-இறக்குமதி கார்ப்பரேஷன், யந்திரங்கள் முதலியன சீனாவுக்கு ஏற்றுமதி செய்யத் தயாரா என்று எழுதிய கடிதங்களுக்கு 1205 பதில்கள் பிரிட்டிஷ் கம்பெனிகளிடமிருந்து வந்ததில், இரண்டு கம்பெனிகள் மறுத்தும், 7 கம்பெனிகள் அரை குறையாய் முடியாதென்றும், 1100 கம்பெனிகள் சம்மதம் தெரிவித்தும் பதில் எழுதியுள்ளதாக அறிவித்துள்ளது.

ஆபீஸ்களுக்கு வேண்டிய யந்திர சாமான்கள், பஞ்சாலை யந்திரங்கள், ரெவரிஜரேட்டர், டைப்ரைட்டர், எமரி துணி போன்றவைகள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப் பேச்சு வார்த்தை நடக்கிறது. 15 லட்சம் பவுன் பெறுமான பிரிட்டிஷ் துணிகளுக்கு, மாஸ்கோ சர்வதேச தொழில் மகாநாட்டின்போது ஏப்ரலில் சீனா ஆர்டர் செய்துள்ளது.

தோழர் வெங்கடேசன் (எம்.எல்.ஏ.) மனைவியார் மறைவு

மன்னார்குடி, அக். 16—

15-10-52 காலை 10-45 மணிக்கு தோழர் பி. வெங்கடேசன் எம்.எல்.ஏ. அவர்களின் மனைவி மன்னார்குடி கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியில் காலரா வியாதியால் காலமாகிவிட்டார்கள் என்று மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாருக்கு 3 சிறு குழந்தைகள் இருக்கின்றன (1 ஆண் 2 பெண்). (ந. கி.)

வடிகட்டும் முறைக்கு மாணவர்சங்கக் கண்டனம்

சென்னை, அக். 18—

சென்ற வாரம், சென்னையிலுள்ள 16 உயர்நிலைப்பள்ளிகளின் பிரதிநிதித்வக் கூட்டம் 32 மாணவர் சம்மேளனத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு நடைபெற்றபோது, சமீபத்தில் சென்னை சர்க்கார் பிறப்பித்துள்ள வடிகட்டுதல் உத்தரவைப்பற்றி விவாதிக்கப்பட்டது.

இந்த வடிகட்டும் முறை கைவிடப்பட்டு, 2 வருடங்களுக்குப்பிறகு, மீண்டும் அதை புகுத்த முற்படும் சென்னை சர்க்கார் உத்தரவைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வடிகட்டுதல் முறையை எதிர்த்து கையெழுத்தியக்கம் ஒன்று ஆரம்பிப்பதென்றும், கல்வி மந்திரியை பேட்டிகாண ஒரு தூதுகோஷ்டியை நியமிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இனும் ஒழிப்பை சரியாக அமுல் நடத்துக!

நிலவெளியேற்றத்தை தடுத்து நிறுத்துக!

சாத்தான்குளம், அக் 14—

கருவேலம்பாடு கிராமம் திருச்செந்தூர் தாலுகாவில் சாத்தான்குளத்திலிருந்து 5 மைல் தூரத்திலிருக்கிறது. சுமார் 200 வீடுகள், 65½ ஏக்கர் நஞ்சை, 375 ஏக்கர் புஞ்சை சுமார் 5000 பனை மரங்கள் கிராமத்தில் உண்டு இது ஒரு மேஜர் இனும் கிராமம். இனும் ஒழிப்பில் ஈடுபட வேண்டிய கிராமம்.

இனும் ரிஜிஸ்டர்படி 1865ல் திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி கோவிலில் உதய மார்த்தாண்ட பூசை கட்டளைக்கு தேவாதாயமாக விடப்பட்ட இனும் கிராமம் இது. பலகைகள் மாறி தற்பொழுது சேரவனம் பண்ணையார் என்ற குடும்பத்தைச் சேர்ந்த பழனியப்பபிள்ளை வேலாயுதம் பிள்ளை, ஷண்முகவேலாயுதம் பிள்ளை என்பவர்களிடம் இனும்தார் பொறுப்பு இருந்தது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு இது இனும் கிராமம்தான், தங்களுக்கு பட்டா இல்லையென்று, இவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நிலைமை இப்படியிருந்தும் திடீரென இக்கிராமம் செட்டில்மெண்டு அதிகாரியின் தீர்ப்புப்படி "பிரைவேட்" என்று சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. சென்ற வருடம் இனும்தார்கள் கிராம நிலத்தை பலருக்கு சுமார் ரூ. 1,30,000க்கு விற்றுவிட்டு போய்விட்டதாகக் கேள்வி. அவர்களுக்கு இவ்வாறு ஒரு இனும் கிராமத்தை சொந்தமாக விற்க உரிமை இல்லையென்று கூறப்படுகிறது. உள்ளூரிலேயே சுமார் 40 பேரும் வெளியூரிலிருந்தும் சுமார் 20 பேரும் இவ்வாறு கிரயத்திற்கு வாங்கி இருக்கிறார்கள்.

இவ்வாறு நிலத்தை கிரயம் வாங்கினவர்கள் நிலத்தை இதுவரை வருடக் கணக்காய் கட்டுக்குத்தகைக்கு சாகுபடி செய்துவந்த விவசாயிகளை வெளியேற்றிவிட்டு நிலங்களை சுவாதீனம் செய்து கொண்டுள்ளார்கள். இதைப்பற்றி அதிகாரிகளுக்குச்செய்த முறையீடுகள் இதுவரை எத்தகைய பலனுமளிக்கவில்லை. 120 விவசாயக் குடும்பங்கள் தெருவில் நிற்கின்றன. சாகுபடிக்கு நிலமில்லாமல் பிச்சையெடுக்கத்தான வேண்டும்.

இந்த கிராமத்திய பனைமரத்திற்கு கட்டுக்குத்தகை விகிதம் பனை ஒன்றுக்கு வருஷத்திற்கு ரூ. 1 சுமார் 60 விவசாயிகள் இதில் ஈடுபடுபவர்கள்.

புஞ்சை நிலம் கட்டுக்குத்தகை, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1 தீர்வையாகக் கட்டவேண்டும் தோட்டக்கால் (சுமார் 20 ஏக்கர்) முன்பு வருஷத்திற்கு குருணிக்கு (8 செண்ட்) 0-8-0 வாக இருந்தது இப்பொழுது குருணிக்கு ரூ. 4 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் கிரயம் வாங்கினவர்கள் பட்டா கேட்பார்கள். இனும்தார் கிரயத் தொகையுடன் வெளியூர்சென்றுவிட்டது. பாடுபட்டு வந்த விவசாயிகளுக்கு பட்டா போட்டுக் கொடுக்கவேண்டியது நியாயமாகும். ஆனால் அவர்கள் நிர்தாட்சண்யமாய் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்கள். கூலிகளாய் ஒரு சிலரே பிழைக்க முடியும். குத்தகைக்கு சாகுபடி செய்த இனும் நிலத்தில் கூலியாக இனி வேலை செய்ய வேண்டும்.

சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஒன்றுபட்ட கிளர்ச்சி நடத்தி இழந்த நிலத்தை மீண்டும் அடைவதற்கும் தஞ்சை நிலவெளியேற்ற எதிர்ப்பு சட்டம் இந்த ஜில்லாவிலும் அமுலுக்கு வரவேண்டுமென்று வற்புறுத்துவதற்கும் விவசாய சங்கம் அமைத்து முன்னேறுவது ஒரே வழியென்று கருவேலம்பாடு விவசாயிகள் உணர்ந்துவிட்டனர்.

நாடு கடத்தப்பட்டோர் சங்கத்தின்மீது

ரௌடிகள் படையெடுப்பு

சென்னை, அக். 16—

பெரம்பூர், செம்பியம் 6வது வட்டத்து தி. மு. க. உதவி-செயலாளர் பி. எ. வெங்கடேசலு என்பவர், மேற்கண்ட சங்கத்தைச் சேர்ந்த பெரிய சாமி என்பவர் கொடுக்க வேண்டிய இரண்டு ரூபாயை முன்னிட்டு, ஸ்தலத்திலுள்ள தனது ஆட்களின் புடைசூழ, அக். 14ம் தேதி இரவு 11 மணிவரை மேற்கண்ட சங்கத்தில் [illegible]

[illegible]

போலீசாருக்கும், தி. மு. க. தலைவர்களுக்கும் இது பற்றி அறிவித்துள்ளதாகத் தெரிகிறது. (ந-கி.)

வரவேற்புக்கு காங்கிரசார் வராததற்கு மக்கள் சீற்றம்

சேலம், அக். 14—

12—10—52 மாலை 6 மணிக்கு சேலம் [illegible]

[illegible]

மேட்டூர் கலவர வழக்கில் தீர்ப்பு

சேலம், அக். 14—

நேற்று சேலம் ஜில்லா அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் மேட்டூர் கலவர வழக்கில் தீர்ப்புக் கூறினார். தோழர்கள் துரைசாமி, வெங்கடேசலு உள்பட 5 தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். கருப்பசாமிக் கவுண்டன் என்பவருக்கு மட்டும் 6 மாத கடுங்காவல் தண்டனை விதித்தார்.

தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் பஞ்சம் தாண்டவமாடுகின்றது

தோழர் நம்பியார் அறிக்கை

மைசூர், அக். 17—

வரப்போகும் பாராளுமன்றக் கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி நாட்டில் குறிப்பாக தென்னாட்டில் உள்ள மோசமான உணவு நிலைமையைப் பற்றி விவாதத்தை கிளப்பும் என்று கம்யூனிஸ்ட் எம். பி. யான தோழர் அனந்தன் நம்பியார் இன்று கூறினார்.

தமிழ் நாட்டிலும், கேரளத்திலும் உள்ள மக்களின் வறுமையான நிலையை தான நேரில் பார்த்ததாகவும், சென்னை ராஜ்யத்தில் கட்டுப்பாடு எடுக்கப்பட்டபிறகு விலை உயர்வும் ஏற்பட்டுவருகிறதாகவும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவருவதாகவும் கூறினார். மைசூரிலும் சில பகுதிகளில் இம்மாதிரி நிலைமை உள்ளதாகக் கூறினார். பஞ்சத்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக உணவு தரப்பட வேண்டுமென்றும், குடிவாரபாத்தியதை அளிக்கப்பட வேண்டுமென்றும் கிராம கடன் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் கூறினர்.

தோழர் நம்பியார் மைசூர் சமஸ்தான ரயில்வே சிப்பந்திகள் தலைவர்களைக் கண்டு ஐக்கிய தொழிலாளர் முன்னணியை ஏற்படுத்துவது பற்றி பேசினர். சகல ரயில்வேத் தொழிலாளிகளிடமும் குறிப்பாக தென் பிராந்திய ரயில்வேக்களிலுள்ள தொழிலாளிகளிடம் ஒற்றுமை அவசியம். மைசூர், எம்.எஸ்.எம். எஸ். ஐ. ஆர். தொழிலாளிகள் ஒன்றுபட வேண்டுமென்றார். ஒரு பலமான மத்திய சங்கம் உருவாக்க கம்யூனிஸ்ட் கட்சி பாடுபடும் என்றார்.

பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுக!

திண்டுக்கல், அக் 15—

திண்டுக்கல் டவுன் குடைப்பாறைப்பட்டியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்றது.

நிரந்தரமாய் உணவு நிவாரணக் கடைகளில் உணவுக் கொடுக்கவேண்டும் என்றும் கிராமங்களுக்கு லாரி மூலம் சோளம் கிடைக்கவேண்டுமென்றும், வருகின்ற தீபாவளியை முன்னிட்டு மக்களுக்கு உணவு கிடைக்க சர்க்கார் உடனடியாய் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சர்க்காரை வற்புறுத்தும் தீர்மானத்தை தோழர் எஸ். ஏ. தங்கராஜ் பிரரேபித்துப் பேசினர். பின்பு தோழர் ஏ. பாலசுப்ரமணியம், கடந்த நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் செய்த அடாத செய்கைகளை கண்டித்தும், பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு சர்க்கார் உடனடியாய் உதவிசெய்யாவிட்டால் பெரும் பஞ்சத்துக்கு மக்கள் இரையாக நேரிடும் என்றும் விரிவாகப் பேசினர்.

நகரசபையார் இதுவரை குடைப்பாறைப்பட்டிக்கு எலக்ட்ரிக் வசதியும், (நீரோடையும்) சாக்கடை வசதியும், குப்பைத்தொட்டி வசதியும் செய்யாதது கண்டு வருந்துவதுடன் வசதிகளை செய்யவேண்டுமென்று கோரப்பட்டது.

மில் கூட்டுறவு பண்டகசாலை தேர்தலில் மகத்தான வெற்றி!

கம்போடியா மில் தொழிலாளர் ஐக்கிய கமிட்டி சாதனை

சோஷலிஸ்டுகள் தோல்வி

கோவை, அக் 16—

சிங்காநல்லூரிலுள்ள கம்போடியா மில் கூட்டுறவு பண்டகசாலைத் தேர்தல் நேற்று நடைபெற்றது. காங்கிரஸ் மனப்பான்மை கொண்ட தொழிலாளிகள், தி. மு. க. மனப்பான்மை கொண்ட தொழிலாளிகள், செங்கொடித் தொழிலாளிகள் அனைவரும் ஒன்றுபட்டு ஐக்கிய கமிட்டியமைத்து கூட்டுமுறையில் 4 அபேட்சகர்களை நிறுத்தினர். அந்நால்வரும் வெற்றிபெற்றனர். சோஷியலிஸ்டு தொழிற்சங்கத்திலுள்ள தலைவர்களை இந்த ஐக்கியக் கமிட்டியில் கொண்டுவரச் செய்யப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது. அவர்கள் ஒற்றுமைக்கு வர மறுத்து தனியாக 4 அபேட்சகர்களைப் போட்டனர். அவர்கள் நால்வரும் தோற்றுவிட்டனர்.

வாக்குகள் விபரம்

சுப்ரமணியம்	843	(ஐ.க.)
கருப்பண்ணன்	851	(ஐ.க.)
மருதாசலம்	881	(ஐ.க.)
சின்னையன்	913	(ஐ.க.)
ஈஸ்வரன்	763	(சோ.)
கருப்பண்ணன்	769	,,
வெங்கடாசலம்	778	,,
வையாபுரிக் கவுண்டர்	787	,,

கடைசி 4 சோஷலிஸ்ட் அபேட்சர்களும் தோல்வியடைந்தவர்கள்.

சோஷலிஸ்ட் தலைவர்களின் அபேட்சகர்களில் ஒருவர் பிர்க்கா காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரான ஈஸ்வரன் என்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரசுடன் இருந்தவர் தேர்தல் சமயத்தில் சோஷலிஸ்டுகளுடன் சேர்ந்தார்.

பிரஜா-சோஷலிஸ்டு இணைப்பு

கல்கத்தா, அக். 17—

கம்யூனிஸ்டுகளுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளமாட்டோம் என்று கூறிவிட்டதால், காங்கிரசுக்கும் பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சிக்கும் உள்ள வித்தியாசம் குறைந்துவிட்டது என்றும், ஆகவே அவர்களை ஒன்று சேர்க்க நேரு போன்ற தலைவர்கள் ஈடுபட வேண்டுமென்று இ. தே. தொ. ச. காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு ஹரிஹரநாத் சாஸ்திரி இன்று கூறினர்.

சேலத்திலே பட்டினிச்சாவு

சேலம், அக். 15—

இன்று காலை 55 வயது கிழவி நடுப்பகல் இரண்டு மணிக்கு பழைய கோஷா ஆஸ்பத்திரி முன்பு இறந்து கிடந்தாள். பட்டினியின் காரணமாக இச்சாவு ஏற்பட்டது. நடுப்பகல் இரண்டு மணிக்கு இறந்தும் மாலை 5 மணி வரை பிரேதம் நடைபாதையிலே கிடந்தது. (ந. கி.)

பேர்லின் விண்ணப்பத்தில் கையெழுத்துகள்

சேலம், அக். 15—

கம்யூனிஸ்டுக் கட்சியின் சேலம் ஜில்லாக் கமிட்டி மெம்பர் தோழர் கே. செல்லப்பன் மீண்டும் பேர்லின் விண்ணப்பத்தில் 212 கையெழுத்துகள் வாங்கி அ. இ. சமாதான கௌன்சிலுக்கு அனுப்பியுள்ளார்.

ஹூட்டி தங்க சுரங்கத் தொழிலாளர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

சங்கத் தலைவர் மீது வெளியேற்ற உத்தரவு!

ஐதராபாத், அக். 17—

நேற்று ஹூட்டி தங்கச் சுரங்கத் தொழிலாளிகள், நிர்வாகம், சங்க அங்கீகாரத்தை ரத்து செய்ததைக் கண்டித்து உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்துள்ளனர் என்று ஐதராபாத் தொழிற்சங்க காங்கிரஸ் அறிக்கை விடுத்துள்ளது.

நீக்கப்பட்ட தொழிலாளிகளை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், சம்பள உயர்வு கோரியும் கொஞ்ச நாட்களுக்கு முன் தொழிலாளிகள் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். ராஜ்ய உள்நாட்டு மந்திரி கோரிக்கைகளைக் கவனிப்பதாகச் சொன்னதன்பேரில் சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள் உள்நாட்டு மந்திரியைச் சந்திக்க ஐதராபாத் வந்தனர். இதற்கிடையில் நிர்வாகம் 55 தொழிலாளிகளை வேலையை விட்டுநீக்கியது என்றும், ஜில்லா கலெக்டர் தொழிற்சங்க ஊழியர்கள் மீது வெளியேற்ற உத்தரவை சாதரா செய்துள்ளது என்றும் தொழிற்சங்க காங்கிரஸ் கூறியுள்ளது. மந்திரியைச் சந்திக்க ஐதராபாத் வந்துள்ள சங்கத் தலைவர் திரு சர்மாமீது வெளியேற்ற உத்தரவு போடப்பட்டது. அவர் ஹூட்டி திரும்பிய போது கைது செய்யப்பட்டு ரெய்ச்சூரில் போலிசாரால் கொண்டுவந்து விடப்பட்டார்.

ஹெட் வார்டர் வார்டரானர்!

சேலம், அக். 15—

சேலம் மத்திய சிறையில் வேலை பார்த்துவந்த ஹெட்-வார்டர் மாரியப்பன் வார்டராக மாற்றப்பட்டார். சேலம் ஜெயிலருக்கும் அவருக்கும் ஏற்பட்ட தகராறே இதற்குக் காரணமாம். அவர் வார்டராக மாற்றப்பட்டதற்கு ஆபீஸரிடம் அவமரியாதையாகநடந்து கொண்டார் என காரணம் காட்டப்பட்டுள்ளதாம்.

மலிவான விலையில் இலங்கைக்கு சீன அரிசி

பம்பாய், அக் 17—

பீகிங்கில் ஒரு மாத காலம் தங்கியிருந்து இலங்கை வர்த்தக மந்திரி கையெழுத்திட்டுள்ள 80 லட்சம் டன் சீன அரிசிக்கான வர்த்தக ஒப்பந்தத்தை, இன்று இலங்கை சர்க்கார் அங்கீகரித்துள்ளது. இன்றிரவு கூடிய இலங்கை மந்திரி சபைக் கூட்டத்தில் சீனாவுக்கு ரப்பர் ஏற்றுமதி செய்யவும், சீனாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யவும் நீண்டகால ஒப்பந்தம் செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இலங்கைக்கு வருடத்துக்குத் தேவைப்படும் அரிசி 4 லட்சம் டன். இந்த ஆண்டு 70,000 டன் அதற்கு பற்றாக்குறை. சீனா தர இருப்பதால், இந்தப் பற்றாக்குறை நீங்கி, அடுத்த பிப்ரவரி வரைக்கும் இலங்கையின் அரிசிப் பிரச்சினை தீர்ந்துள்ளது. கடைசியாக இந்தியாவிலிருந்து முன்னர் இலங்கை 15 ஆயிரம் டன் அரிசி வாங்கியது.

சீன அரிசியின் விலை, [illegible] அரிசியைவிட மலிவு; அதாவது ஒரு டன் அரி[illegible] பவுன். ஆனல் அமெரி[illegible] ஒரு டன் 75 [illegible] நாணய[illegible] சிக்கு [illegible] செலுத்[illegible] கொள்[illegible]

சென்னை ராஜ்ய மக்களுக்கு நாற்றம் பிடித்த அரிசி மிகப்பிடித்தமானதாம்!

கல்கத்தா, அக். 16—

சென்னை ராஜ்யத்தில் வாழும் சாதாரண மக்களுக்கு நாற்றம்பிடித்த அரைவேக்காடு புழுங்கல் அரிசி ரொம்ப பிடித்தமானது. அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டிய நாற்றம்பிடித்த புழுங்கல் அரிசி உங்களுக்கு தவருக அனுப்பப்பட்டுவிட்டது என்று மத்திய சர்க்கார் உணவு மந்திரி ஜனப் ரபி அகமதுகித்வாய் வங்காள ராஜாங்க சபை உறுப்பினரான திரு டி. பி. கோஷ்-க்கு எழுதிய கடிதத்தில் சென்னை மக்களை அவமதிக்கும் முறையில் பதில் கூறியுள்ளார்.

கல்கத்தா பங்கீடு கடைகளில் மிக மோசமான நாற்றமெடுக்கும் புழுங்கல் அரிசி விநியோகிக்கப்படுகிறது என்று உணவு மந்திரிக்கு திரு. டி. பி. கோஷ் கடிதம் எழுதியுள்ளார்.

அதற்குப் பதிலளிக்கும் போது உணவு மந்திரி, மேற்கூறியவாறு கூறியுள்ளார். இவ்வாறு மூட்டைகளில் தவருன குறி போடப்பட்டதின் காரணமாக அனுப்பப்பட்ட அரைவேக்காடுப புழுங்கல் அரிசியின் அளவு 500 டன்னாகும்.

வாலிபர் சங்கப் பொதுக்கூட்டம்

திண்டுக்கல், அக். 14—

திண்டுக்கல் அந்தோணியார் தெருவில் 9-10-52 வாலிபர் சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றுள்ளது. மேற்படி கூட்டத்தில் தோழர் வ. வைரவன் தலைமை வகித்தார். தோழர் எஸ். ஏ. தங்கராஜன், எஸ். கே. பாக்கியநாதன், ஏ. ஓய். ராஜூ வாலிபர் கடமையும், தற்கால அரசியல் நிலைமையும் என்பதை பற்றி விரிவாகப் பேசினர்கள். புதிய வருட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்திய மக்களின் பஞ்சம் பட்டினியைக் கண்டு சோவியத் யூனியன் உணவு நன்கொடை வழங்கியதற்கு மகிழ்ச்சி தெரிவித்தும இன்று திண்டுக்கல் தாலுகா முழுவதும் பயங்கரமான பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளதால் திண்டுக்கல் தாலுகாவைப் பஞ்ச பிரதேசமென்று பிரகடனம் செய்து உடனடியாக பஞ்ச நிவாரண வேலைகள் செய்யும்படி சர்க்காரை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஓர்க்ஸ் கமிட்டித் தேர்தலில் செங்கொடி சங்கம் வெற்றி

சேலம், அக். 14—

சேலம் ஜவஹர் மில்லில் ஓர்க்ஸ் கமிட்டித் தேர்தல் 10-10-52-ல் நடைபெறுவதாக இருந்தது. அதில் செங்கொடி சங்கமும், இ. தே. தொ. ச. காங்கிரசும் போட்டியிடுவதாக இருந்தது. ஓர்க்ஸ் கமிட்டியில் 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இத்தேர்தலில் செங்கொடி சங்கம் 6 பேர்களையும்—இ.தே.தொ. சங்கம் 9 பேர்களையும் நிறுத்தியது. தேர்தலை நடத்துவதற்காக சின்னம் முதலியவை தேர்ந்தெடுத்த பின்—தேர்தல் நடைபெறும், அன்று நடுப்பகல் இ. தே. தொ[illegible] தன அபேட்[illegible] [illegible]

மதுரை தேர்தலில் மாட்டு பெட்டிக்காரர்கள் மோசடி பற்றி புகார்

தோழர் கே. டி. கே. தங்கமணியின் வழக்கு

மதுரை, அக். 16—

மதுரை நகரசபை தேர்தலில் முதல் வார்டுக்கு காங்கிரஸ் அபேட்சகர் வீரபத்திர முதலியார் நகர மக்கள் கூட்டணி அபேட்சகர் தோழர் கே. டி. கே. தங்கமணியைவிட 13 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றியடைந்ததாக பிரகடனம் செய்தது செல்லத்தக்கதல்லவென்று தோழர் கே. டி. கே. தங்கமணி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

மதுரை சப்-ஜட்ஜ் முன்பு வழக்கு 14-10-52-ல் தாக்கல் செய்யப்பட்டது.

தோழர் கே. டி. கே. தன் மனுவில் கூறுவதாவது:—

செல்லாத ஓட்டுகளும் இறந்தவர்களுடைய ஓட்டுகளும் ஊரிலில்லாதவர்களின் ஓட்டுகளும் ஓட்டர் ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டவர்களின் ஓட்டுகளும் கள்ளத்தனமாக போடப்பட்டன. இவ் ஓட்டுகள் யாவும் மாட்டுப் பெட்டியிலே போடப்பட்டுள்ளன.

நகர சபை தேர்தலில் பல ஊழல்களும் ஒழுங்கினமும் நடந்துள்ளன. இதனுல் 13 ஓட்டு அதிகம் பெற்று வெற்றி பெற்றதாக பிரகடனம் செய்யப்பட்ட காங்கிரஸ் அபேட்சகர், நகர சபை கவுன்சிலராக அருகதையற்றவராவார்.

26 வாக்காளர்கள் ஓட்டுப் போடசென்ற போது, அவர்கள் ஓட்டுகளை வேறு சிலர் போட்டு விட்டுப் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இவர்களுடைய ஓட்டுகளை கள்ளத்தனமாக வேறு யாரோ போட்டுள்ளனர். இந்த 26 வாக்காளர்களும் ஒழுங்காக ஓட்டளிக்க வாய்ப்பு கிடைத்திருந்தால், அது எனக்கே ஆதரவாயிருந்திருக்கும்; தேர்தலின் முடிவும் எனக்கு சாதகமாயிருந்திருக்கும்.

வெளியூர் சென்றிருந்தவர்கள்

ஈரோடு, திருச்சி சென்றிருந்த 11 பேர்கள் தேர்தல் நாளன்று மதுரையில் இல்லையென்றபோதிலும், அவர்களுடைய ஓட்டுகளும் வேறு சிலரால் கள்ளத்தனமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த 11 பேர்களின் பெயர்களும் விலாசங்களும் மனுவில் கொடுக்கப்பட்டுள்ளன. வேறு சிலர் காங்கிரஸ் அபேட்சகரின் தூண்டுதலின்பேரில் கள்ளத்தனமாக இவர்களுடைய ஓட்டுகளைப் பதிவுசெய்துள்ளனர்.

நீக்கப்பட்டவர்

முனியம்மாள் என்பவர் ஓட்டர் ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டவர். ஆனால் இவர் ஓட்டு போட்டிருப்பதாகத் தெரிகிறது. இதேபோல மற்றும் பல ஓட்டுகளும் பதிவாகியுள்ளன. இதுவும் மாட்டுப்பெட்டிக்காரர்களின் தூண்டுதலால்தான் நடைபெற்றுள்ளது.

அவதூறு பிரசாரம்

காங்கிரஸ அபேட்சகர்களும் அவர் ஏஜண்டுகளும் என் மீது துஷ்பிரசாரம் செய்து ஓட்டர்களை எனக்கெதிராக தூண்டிவிட்டனர். எனக்கு ஓட்டு போட்டால் முத்துராமலிங்க தேவரின் அதிருப்திக்கு ஆளாக வேண்டுமென பொய்ப்பிரசாரம் செய்து 300, 400 தேவர் ஓட்டர்களை சுயேச்சையான முறையில் ஓட்டளிக்காதபடி தடை செய்தனர்.

சென்ற தேர்தலில் நான் எதிர் அபேட்சகரிடமிருந்து ஏராளமாய் லஞ்சம் வாங்கிக் கொண்டதாகவும் தூற்றினர். இது தேர்தல சட்டத்தின்படி குற்றமாகும்.

பயமுறுத்தல்

தேர்தலுக்குப்பின என்னையும் என கட்சியினரையும் சர்க்கார் கைது செய்துவிடுமென றும் எனவே என்னை ஆதரித்துப் பயனில்லை என்றுகூறி பயமுறுத்தினர். முக்கியமாய் தத்தனேரி கிராமத்தில் இவ்வாறு பீதியுண்டுபண்ணப்பட்டது.

பணத்துக்கு ஓட்டு

கைலாசபுரத்தில் வாசகசாலைக்காகவும் அம்பேத்கார் நகரில் சாவடிக்காகவும் மாட்டுப் பெட்டிக்காரர்கள் பணம் கொடுத்து மொத்தமாக ஓட்டுகளை விலைக்கு வாங்கினர்.

13 ஓட்டுகள் வித்தியாசத்திலே எனக்கு பாதகமான முடிவு செய்யப்பட்டிருக்கிறது. செல்லுபடியாகாத ஓட்டுகளை கழிக்கும் பட்சத்தில் நானே வெற்றி பெற்றவனவேன். எனவே சட்டப்படி நானே தேர்ந்தெடுக்கப்பட்டவனுவேன் என்று உத்திரவிடும்படி கோர்ட்டாரைக் கேட்டுக் கொள்கிறேன.

அசோக்மேத்தா, அம்பேத்கார் தேர்தல் வழக்கு தள்ளுபடி

பம்பாய், அக். 17—

கடந்தபம்பாய் பார்லிமென்டரி தொகுதி தேர்தலில் தோழர் டாங்கேயும், ஜி. வி. தேஷ்முக் என்பவரும், பொது தொகுதி ஓட்டுகளையும் ரிசர்வ் தொகுதி ஓட்டுகளையும் ஒரே பெட்டியில் போடும்படி ஓட்டர்களிடம் பிரசாரம் செய்தார்களென்றும், ஆகவே அத் தேர்தல் செல்லுபடியாகாதென்றும் அசோக மேத்தாவும், அம்பேத்காரும் ஒரு தேர்தல் பெட்டிஷன் போட்டிருந்தனர்.

தேர்தல் விசாரணைக் கமிஷன் அவர்களின் வாதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து, மனுவைத் தள்ளுபடி செய்

வானொலி

அக்: 21 செவ்வாய்

சென்னை (41·32மீ)

காலை
- 7-00 ஸ்வாகதம்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 காஞ்சிபுரம் ஸ்ரீ வி. கிட்டப்பா—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி

பகல்
- 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
- 1-00 மாதர்களுக்கு (தெலுங்கு)
- 1-30 கீதமஞ்சரி
- 1-40 ஹிந்தியில் செய்தி
- 1-50 கதம்பம்
- 2-00 தமிழில் செய்தி
- 2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை
- 4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
- 4-30 ஐரோப்பிய சங்கீதம்
- 6-30 ஸ்ரீநிவாச ஐயங்கார் (வயலின்)
- 6-00 ஆங்கிலத்தில் செய்தி
- 6-10 அறிவிப்புகள்
- 6-20 வி. சோமசுந்தரம் —பாட்டு
- 7-00 நவர்வர்ணக்ருதி (8)
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 பண்ணைப் போர் முறை (பேச்சு)
- 7-45 நாகஸ்வரம்
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 ஹிந்தி பாடம் (தெலுங்கு)
- 9-30 எஸ். சிவராஜ ஐயர் —பாட்டு
- 10-00 வாத்ய இசை

திருச்சி (389·6மீ)

காலை
- 7-10 கீதாரம்பம்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 எஸ். பி. சேதுராமன் —பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி
- 8-15 சித்ரகானம்

பகல்
- 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
- 1-00 இசை வேளை
- 1-40 ஹிந்தியில் செய்தி
- 1-50 கதம்பம்
- 2-00 தமிழில் செய்தி
- 2-10 புல்லாங்குழல், பியானோ
- 2-15 உயர்நிலைப்பள்ளிகளுக்கு

மாலை
- 4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
- 5-30 டி. எம். கமலா—பாட்டு
- 5-45 இசைப்பயிற்சி
- 6-05 அறிவிப்புகள்
- 6-10 எஸ். பி. சேதுராமன் —பாட்டு
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 குரல் வகை
- 7-45 நாகஸ்வரம்
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 டி. எஸ். மரியானந்தம் —பாட்டு

ரயில்வே தொழிலாளர் பொதுக்கூட்டம்

குன்னூர், அக். 13—

12-10-52 ஞாயிறன்று குன்னூரில், தெ. பி. ர. தொ. சங்கத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு தோழர் ஆர். ஜயராமன் கோவை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தலைமை வகித்தார். தோழர் கே. டி. ராஜூ எம்.எல்.ஏ. பேசும்போது, நீலகிரி ரயில்வேயிலிருக்கும் தொழிலாளிகளுக்கு இதுகாலம் கொடுத்து வந்த மலைவாழ் படியை மறுக்கும் அரசாங்கம் ரயில் கட்டணத்தை குறைக்கவோ, இதரவசதிகளை பெருக்கவோ, ராணுவ செலவை குறைக்கவோ மறுக்கிறது. சென்னை கவர்னருக்கு மேல் மாடிக்குச் செல்ல "லிப்ட்" வேண்டும் என்று கூறும் காங்கிரஸ்காரர்கள் மலைவாழ் படியை மறுப்பது எப்படி பொருந்தும் என்றும், இந்த மலைப் படியை மறுப்பதற்காக அனுவசியமாக திடீர் மாற்றங்களை செய்வது தொழிலாளிகளை ஆத்திரமூட்டுவதாகுமென்றும், பொதுமக்களுக்கு வரி உயர்த்தும், தொழிலாளிகளை கொடுமைப்படுத்தும் இந்த ஆட்சியை மாற்ற சகலரும் ஒன்றுபட வேண்டுமெனவும், தொழிலாளிகளின் நியாயமான கோரிக்கைக்கு பொது மக்கள் ஆதரவு தரவேண்டுமெனவும் பேசினர்.

பின்னர் தென் பிராந்திய ரயில்வேத் தொழிலாளர் சங்கத்தை அங்கீகரிக்கவேண்டுமென்றும் மலைப்படி கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விவசாயிகள் சங்கப் பொதுக்கூட்டம்

மன்னார்குடி, அக். 14—

10-10-52 இரவு 7 மணிக்கு மேலபனையூர் கிராமத்தில் விவசாய சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 5000 பேர் திரண்டிருந்தனர்.

பனையூர் தோழர் ராஜகோபால வாண்டையார் அவர்கள் தலைமை தாங்கினர்.

மருதூர் தோழர் எம். எம். வைத்தினதன், தோழர்கள், மணலி சி. கந்தசாமி எம். எல். ஏ., பி. வெங்கடேசன எம். எல். ஏ., எல். ராமச்சந்திரன் மன்னார்குடி, ஏ. ராமானுஜம் சோழ பாண்டி முதலியவர்கள் விவசாய சங்கமும் மக்கள் கடமையும், அவசர சட்டமும் அதில் உள்ள குறைபாடுகளும் பற்றி விரிவாய் பேசினர்கள்.

திருவாரூர் டேனியல் கலா கோஷ்டியாரால் கலா நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. (ந-க)

Edited, Printed & Published by G. Alavandar, at Janasakti Press, Subodhaya Buildings, 38, Mount Rd, Madras 6.